**بسم الله الر حمٰن الرحيم.**

الحمد لله الفتّاح المنّان. الّذي هدانا للاسلام والايمان. اشهد ان لا اله الّا الله وحده لاشريك له شهادة من قصدق بالقلب واقرار باللّسان. واشهد انّ سيّدنا محمّد عبده ورسوله الّذي ايده بالمعجرات الباهرة وانزل الفرقان. والصّلاة والسّلام علي سيّدنا محمَدن النبيّ القائل من يرد الله به خيرا ينفقهه في الدّين. وعلي اٰله واصحابه والتّابعين لهم باحسان الي يوم الدّين.

**அவ்வல் கலிமா தையிப்:**

| | |
|---|---|
| அல்லாஹ் தஆலாவை தவிர வணக்கத்திற்கு பாத்திரமானவன் யாருமில்லை | لَا اِلٰهَ اِلَّا اللهُ |
| முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ் தஆலாவுடைய திருத்தூதராயிருக்கும். | مُحَمَّدٌ رَّسُوْلُ اللهِ |

**இரண்டாம் கலிமா ஷஹாதத்:**

| | |
|---|---|
| பிஷகர(சந்தேகமற) அறிந்து விண்ணப்பம் செய்கிறேன். | اَشْهَدُ |
| உண்மையாக அல்லாஹ் தஆலாவைத் தவிர வணக்கத்திற்கு பாத்திரமானவன் யாருமில்லை | اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللهُ |
| அவன் தனித்தவன். | وَحْدَهُ |
| அவனுக்கு யாதொரு இணையுமில்லை. | لَاشَرِيْكَ لَهُ |
| இன்னும் பிஷகர-சந்தேகமற அறிந்து விண்ணப்பம் செய்கிறேன். | وَ اَشْهَدُ |
| உண்மையாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் | اَنَّ مُحَمَّدًا |
| அவனுடைய உரிய அடியாரும் | عَبْدُهُ |
| அவனுடைய திருத்தூதருமாயிருக்கும். | وَرَسُوْلُهُ |

**மூன்றாம் கலிமா தம்ஜீத்:**

| | |
|---|---|
| அல்லாஹ் தஆலாவை தூய்தாகிறதாக தூய்தாக்கிறேன். | سُبْحَانَ اللهِ |
| எல்லாப் புகழும் அல்லாஹ் தஆலாவுக்காக இருக்கும். | وَالْحَمْدُ لِلّٰهِ |
| அல்லாஹ் தஆலாவை தவிர வணக்கத்திற்கு பாத்திரமானவன் யாருமில்லை. | وَلَا اِلٰهَ اِلَّا اللهُ |
| அல்லாஹ் தஆலா மிகப் பெரியவன். | وَاللهُ اَكْبَرْ |
| யாதொரு பாவத்தையும் திரும்புவதுமில்லை | وَلَاحَوْلَ |
| யாதொரு இபாதத்தின் பேரில் பலனுமில்லை | وَلَا قُوَّةَ |
| வலுப்பமாகிய, உயர்த்தியாகிய அல்லாஹ் தஆலாவின் உதவி கொண்டே ஒழிய. | اِلَّا بِاللهِ الْعَلِيِّ الْعَظِيْمِ |

**நாலாம் கலிமா தவ்ஹீத்:**

| | |
|---|---|
| அல்லாஹ் தஆலாவை தவிர வணக்கத்திற்கு பாத்திரமானவன் யாருமில்லை. | لَا اِلٰهَ اِلَّا اللهُ |

| | |
|---|---|
| அவன் தனித்தவன். | وَحْدَهُ |
| அவனுக்கு யாதொரு இனையுமில்லை. | لَا شَرِيْكَ لَهُ |
| ராஜாங்கம் அவனுக்குடையாக இருக்கும். | لَهُ الْمُلْكُ |
| எல்லா புகழும் அவனுக்காக இருக்கும். | وَ لَهُ الْحَمْدُ |
| மவுத்தானவர்களை ஹயாத்தாக்குவான். | يُحْيِيْ |
| ஹயாத்தானவர்களை மவுத்தாக்குவான். | وَ يُمِيْتُ |
| நலவடங்களும் அவன் வசமாக இருக்கும். | بِيَدِهِ الْخَيْرُ |
| அவனாகிறவன் வஸ்து அடங்களின் பேரில் மிகவும் திராணி பெற்றவன். | وَهُوَ عَلَي كُلِّ شَيْئٍ قَدِيْرٌ |

**ஐந்தாம் கலிமா ரத்துல் குப்ரி:**

| | |
|---|---|
| யா அல்லாஹ் (இறைவா!) | اَللّٰهُمَّ |
| நான் அறிந்தவனாக அறவே உன்னைக் கொண்டு இணை வைக்கிறதை விட்டும் உண்மையாக உன்னைக் கொண்டு காவல் தேடுகிறேன். | اِنِّيْ اَعُوْذُبِكَ مِنْ اَنْ اُشْرِكَ بِكَ شَيْئًا وَاَنَا اَعْلَمُ |
| நான் அறியாமல் செய்த பாவத்துக்கு உன்னிடத்தில் பிழை பொறுக்கத் தேடுகிறேன். | وَاَسْتَغْفِرُكَ لِمَا لَا اَعْلَمُ |
| உண்மையாக நீயாகிறவன் மறைவானவற்றை மிகவும் அறிந்தவன் | اِنَّكَ اَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ |
| உன்னைக் கொண்டு இணை வைக்குதல் எனும் ஷிர்க்கை விட்டும் தவ்பா செய்து மீண்டேன். | تُبْتُ عَنْهُ |
| தீனுல் இஸ்லாமை தவிர மற்ற மார்க்கங்களை விட்டும் நீங்கி விட்டேன். | وَتَبَرَّأْتُ عَنْ كُلِّ دِيْنٍ سِوٰي دِيْنِ الْإِسْلَامِ |
| ஏ.்.னி (அதாவது) லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸுலுல்லாஹி என்று சொன்னவனாக இஸ்லாமாகி விட்டேன். இதை அந்தியும் சந்தியும் ஓதுகிறது குப்ரை விட்டும் நீங்குகிறதற்கு சபபாக இருக்கும். | وَاَسْلَمْتُ وَاَقُوْلُ لَا اِلٰهَ اِلَّا اللهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللهِ |

**முதலாவது பிள்ளைகளுக்கு படித்துக் கொடுப்பது:**

தமயீஜுள்ள ஏ.்.னி (அதாவது) தன்னாலே உண்ணுவதற்கும், குடிப்பதற்கும் மற்றும் மலம் ஜலத்திற்கு இருந்தால் தன்னாலே துப்புரவு செய்வதற்கும் விபரமறிந்த பிள்ளைகளுக்கு எங்கள் நெய்னார் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹு வஸல்லம் அவர்கள் மக்கத்தில் பிறந்து அவிடத்தில் (خلق) ஹல்குகள் அளவில் நபியாகவும் ரஸுலாகவும் அனுப்பப்பட்டு மதீனத்திற்கு ஹிஜ்ரத் போய் அவிடத்தில் வபாத்தாகி அடங்கப் பட்டார்கள். அவர்கள் சிகப்பை கொண்டு கலப்பற்ற வெண்மையானவர்கள். மனிதர்களுக்கெல்லாம் லட்சணத்தாலும் நடத்தையாலும் குணத்தாலும் நிறப்பமானவர்கள். வம்சம் குறைஷியானவர்கள். அவர்கள் தாயார் பெயர் ஆமினா உம்மா ரலியல்லாஹு அன்ஹா. தகப்பனார் பெயர் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு. பாட்டனார் பெயர் அப்துல் முத்தலிப். பூட்டனார் பெயர் ஹாஷிம். முப்பாட்டனார் பெயர் அப்துல் முனாப் என்று படித்து கொடுக்கிறது.

**முதலாவது தாய் தகப்பன் பேரில் வாஜியாகிறது:**

பிள்ளைகளுக்கு சிறு வயதிலேயே குர்ஆன் ஷரீபு, ஈமான், இஸ்லாம் முதலிய தீனுடைய இல்முகளை கற்பிக்கிறதும் தொழுகை நோன்பு முதலிய இபாதத்துகளை கொண்டு ஏவுகிறதும் தாய் தகப்பன் பேரில் வாஜிபாக இருக்கும்.

இல்மை படிக்கிறது ஆண் பெண் அடங்கள் பேரில் விதியாகிறது –

قَا لَ اللهُ تَعَالٰي وَيَرْفَعِ اللهُ الَّذِيْنَ اٰمَنُوْ وَ الَّذِيْنَ اُوْتُوْ الْعِلْمَ دَرَجَاتٍ

ஏ∴னி (அதாவது) உங்களில் ஈமான் கொண்டார்களே! அவர்களுடைய தரஜாவை நான் உயர்த்தியாக்கி வைப்பேன். இன்னும் அந்த மு∴மினான ஜனங்களில் இல்மை கொடுக்கப்பட்டதே அவர்களுடைய தரஜாவை மிகவும் உயர்த்தியாக்கிவைப்பேன் என்று அல்லாஹ் தஆலா குர்ஆன் ஷரீபில் சொன்னான்.

ஹதீது: இல்மு கடமையாக இருக்கும். ஏ∴னி (அதாவது) ஒருவன் ஆகில் பாலிகாகிவிட்டால் அவனுக்கு அவசியமாகிய பிக்ஹுடைய இல்மை படிக்கிறதும் தொழுகைக்கு போதுமான மட்டிலும் குர்ஆனை படிக்கிறதும் பர்ளாகயிருக்கும். இன்னும் ஒருவன் இல்மை படிக்க நாடி காலில் செருப்பு அணிவானாயின், அவன் கால் அடியெடுத்து வைக்கும் முன் அல்லாஹ் தஆலா அவன் செய்த பாவங்கள் அடங்களையும் பொறுப்பான். இன்னும் குர்ஆனில்

قَالَ اللهُ تَعَالٰي فَاسْئَلُوْ ا اَهْلَ الذِّكْرِ اِنْ كُنْتُمْ لَاتَعْلَمُوْنَ

ஏ∴னி (அதாவது) யே மனிதர்களே! நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் அறிந்தவர்களிடம் படித்துக் கொள்ளுங்கள் என்று அல்லாஹ் தஆலா கூறினான். ஆகையால் அறியாதவர்கள் அறிந்தவர்களிடம் கேட்டு படிப்பது வாஜிப் என்று அறியலாயிற்று.

**தீனுடைய இல்மு மூன்று வகை:**

இல்முகள் அநேகம் உண்டு. அதில் முக்கியமாய் கற்றுக்கொள்ள வேண்டியவை தீனுடைய இல்மு. அது மூன்று வகையாகும்.

1. ஏவல் இன்னது விலக்கல் இன்னது, பர்ளு இன்னது, வாஜிப் இன்னது, ஹலால் இன்னது, ஹராம் இன்னது என்று விளங்கி அறிகிறதாயிருக்கும்.
2. குர்ஆன் ஷரீபுடைய ம∴னா அதன் தப்ஸீருடைய பயானை அறிகிறதாயிருக்கும்.
3. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீதை அறிகிறதாயிருக்கும்.

மவ்லானா ரூமி ஜலாலுத்தீன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சொல்லுகிறார்கள் இந்த மூன்று இல்மையும் அறிந்தவர்கள் தீனுடைய உலமாக்களாக இருக்கும் என்று.

**ஷரஹுடைய ஹுக்மில் ஆகுமானவைகள் ஐந்து:**

1. **பர்ளு:** அதாவது குர்ஆன் ஹதீதுகளின் சான்றுகளால் ஏவல் செய்யப்பட்ட செயல். அதை செய்தால் தவாபு கிடைக்கும். காரணமின்றி விட்டால் பெரும் பாவம். அதிக வேதனை கொடுக்கப்படும். எல்லா இமாம்களும் ஒற்றுமையாய் கூறுகிறார்கள்: பர்ளை மறுத்தவன் காபிராவான் என்று. நஊதுபில்லாஹி மின்ஹு.
2. **வாஜிப்:** அதாவது பல அர்த்தம் கொள்ளும்படியான அத்தாட்சியால் ஏவல் செய்யப்பட்ட செயல். அதை செய்கிறதால் தவாபும், விடுகிறதால் அதாபும் கிடைக்கும். பர்ளைப் போலாக இருக்கும். அதை மறுத்தவன் காபிராக மாட்டான். ஆனால் பெரும் பாவியாவான்.
3. **சுன்னத்:** அதாவது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு தடவை, இரண்டு தடவை விட்டு மற்ற நேரங்களில் எல்லாம் நடத்தி வந்த செய்கை. அதை செய்தால் தவாபு. காரணமில்லாமல் வழமையாக விட்டால் அந்த இரண்டுக்கும் தனித்த அதாபு உண்டு. என்னுடைய சுன்னத்தை விட்டவன் என் ஷபாஅத்தை பெற்றுக் கொள்ள மாட்டான் என்று ஹதீதில் வருகிறது.
4. **முஸ்தஹப்:** அதாவது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு தடவை, இரண்டு தடவை செய்து மற்ற நேரம் விட்டு வந்த செய்கை. அதை செய்தால் தவாபு. விட்டால் அதாபு இல்லை.

5. **முபாஹ்:** அதாவது செய்கிறதும் விடுகிறதும் சம்மதம் கொடுக்கப்பட்ட செய்கை. அதை செய்தால் தவாபும் இல்லை. விட்டால் அதாபும் இல்லை.

**ஷரஹுடைய ஹுக்மில் ஆகாதவை மூன்று:**

1. **ஹராம்:** அதாவது பலவந்தமாகிய பல அர்த்தங் கொள்ளாத அத்தாட்சியால் விலக்கப்பட்டதும், கொஞ்சமாவது ஆகும் என்று அத்தாட்சி இல்லாமல் இருக்கின்ற செயல். அதை செய்தால் பெரிய அதாபும், விட்டால் தவாபும் கிடைக்கும். எல்லா இமாம்களும் ஹராம் என்று ஏகோபித்து சொன்னதை ஆகும் என்று சொன்னவன் காபிராகி விடுவான். நவூதுபில்லாஹி மின்ஹா.
2. **மக்ரூஹ்:** அதாவது வேறு ஒரு ஆதாரம் ஆகும் என்கிறது உறுதியாகியிருக்கிறதுடன் விலக்கப்பட்டது என்று பலவந்தமான அத்தாட்சியால் உறுதியான செய்கை. அதை செய்தால் வேதனையும், விட்டால் தவாபும் கிடைக்கும். ஆகும் என்று செய்தால் காபிராக மாட்டான்.
   ஆனால் மக்ரூஹில் இரண்டு வகை உண்டாம். அதாவது மக்ரூஹ் தஹ்ரீம் என்றும் மக்ரூஹ் தன்ஜீஹ் என்றும் சொல்லப்படும். மக்ரூஹ் தஹ்ரீமாகிறது ஹராமிற்கு சமீபமானது. மக்ரூஹ் தன்ஜீஹானது ஹலாலுக்கு சமீபமானது.
3. **முப்சித்:** அதாவது செய்த அமலை முறிக்கும்படியான செய்கை. அந்த முப்சிதான செய்கையை மனமுரண்டாக செய்தால் வேதனை உண்டு. மறதியாக செய்தால் வேதனை இல்லை.

**பர்ளு இரண்டு வகை:**

பர்ளாகிறது இரண்டு வகைப்படும்.

1. **பர்ளு அய்ன்:** அதாவது அல்லாஹ்வை கொண்டு ஈமான் கொள்வது. தொழுகை, ஜகாத், நோன்பு, ஹஜ் இவைகள் போல். முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே இமான் கொள்ள வேண்டும். ஒருவர் செய்கிறது கொண்டு மற்றவர்களை விட்டும் இந்த கடமை நீங்காது.
2. **பர்ளு கியாபா**: அதாவது மய்யித் தொழுகை, குர்ஆனை ஹிப்ளு செய்கிறது போல் மொத்தமாய் எல்லோர் பேரிலும் கடமையாகும். சிலர் செய்தால் எல்லோரை விட்டும் கடமை நீங்கி விடும். ஒருவரும் செய்யாவிட்டால் எல்லோரும் பாவியாவார்கள்.

இனி பர்ளு அய்னாகிறது பர்ளு கிபாயாவைக் காண ஏற்றம். பர்ளு கிபாயா வாஜிபைக் காண ஏற்றம். வாஜிப் சுன்னத் முஆக்கதாவைக் காண ஏற்றம்.

**தீனுடைய பயானைப் பற்றி பேசுவது:**

قَالَ اللهُ تَعَالٰي اِنَّ الدِّيْنَ عِنْدَ اللهِ الْاِسْلَامُ

அல்லாஹ் தஆலா குர்ஆனில் திருவுளமானான்: திட்டமாக தீன் என்பது இஸ்லாம் எனும் வழிப்பாடாக இருக்கும் என்று. ஆனால் தீன் என்னும் சொல்லுக்கு முப்பொருள் உண்டு.

1. வழிப்பாடு
2. வழக்கம்
3. கூலி

ஆக முப்பொருளையும் பொதிந்ததுதான் தீன் எனும் மார்க்கமாகும். இன்னும்

قَالَ اللهُ تَعَالٰي اِنَّ اللهَ اصْطَفٰي لَكُمُ الدِّيْنَ فَلَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْتُمْ مَسْلِمُوْنَ

திட்டமாக அல்லாஹ் தஆலா உங்களுக்கு தீனுல் இஸ்லாமை தெரிந்து தந்தான். ஆனதால் முஸ்லிமானவர்கள் அல்லாதவர்களாக இருக்கிற ஹாலில் மரணிக்க வேண்டாம் என்று அல்லாஹ் தஆலா குர்ஆனில் திருவுளமாயிருக்கிறான். ஆகையால் அல்லாஹ் தஆலா நம் அனைவர்கள் பேரிலும் கிருபை என்னும் ரஹ்மத்தை புரிந்து தீனுல் இஸ்லாம் எனும் சன்மார்க்கத்தின் பேரில் தரிப்படுத்தி நல்லுதவி புரிவானாகவும்.

**தீன் எனும் எடுப்புக்கு தூன்கள் நாலு:**

தீன் எனும் எடுப்புக்கு நாலு ருகூன்கள் என்னும் தூண்கள் உண்டு. அதில் ஒன்றாவது ஈமான் எனும் உண்மை கொள்ளுதல், இரண்டாவது வழிப்பாடு எனும் இஸ்லாம், மூன்றாவது ஓர்மை படுத்துதல் என்னும் தவ்ஹீத், நாலாவது அல்லாஹ் தஆலாவை அறியுதல் என்னும் ம.்.ரிபா.

இந்த நான்கும் சேர்ந்துதான் தீன் என்றானது. ஆனதால் யாராகில் ஒருவன் இந்த நாலில் ஒன்றை பேதகமாக்கினால் அவனின் தீன் பேதமாகிவிடும், ஹஸ்ஸனல்லாஹு மின்ஹா. (அல்லாஹ் பாதுகாப்பானாக)

**பாபுன் பீ பயானில் ஈமான்:**

ஈமானுடைய பயானை பேசும் பாடம். ஈமானாகிறது

تَصْدِيْقٌ بِالْقَلْبِ وَاقْرَارٌ بِاللِّسَانِ

அல்லாஹுத் தஆலாவையும் அவனுடைய ரஸுலையும் இருதயத்தால் உண்மை கொள்ளுகிறதும் அதன் பிரகாரம் நாவால் விண்ணப்பம் செய்கிறதுமாக இருக்கும். ஈமானுடைய சிபத்தாகிறது முஜ்மல் என்னும் விவரிக்கப்படாத ஈமான் என்றும், முபஸ்ஸல் என்னும் விவரிக்கப்பட்ட ஈமான் என்றும் இரண்டு வகைப்படும்.

**முஜ்மலாகிய விவரிக்கப்படாத ஈமானாவது:**

لَا اِلٰهَ اِلَّا اللهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللهِ

ஏ.்.னி (அதாவது) அல்லாஹ் தஆலாவைத்தவிர வணக்கத்திற்கு பாத்திரமானவன் யாருமில்லை; முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹுத் தஆலாவுடைய திருத்தூராக இருக்கும் என்பதாம்.

**இனி முபஸ்ஸலாகிய விவரிக்கப்பட்ட ஈமானாவது:**

| | |
|---|---|
| அல்லாஹுத் தஆலாவை கொண்டு ஈமான் கொண்டேன். | اٰمَنْتُ بِاللهِ |
| அவனுடைய மலக்குகளை கொண்டு ஈமான் கொண்டேன். | وَمَلَائِكَتِهِ |
| அவனுடைய வேதங்களை கொண்டு ஈமான் கொண்டேன். | وَكُتُبِهِ |
| அவனுடைய நபிமார் ரஸுல்மார்கள் அனைவரையும் கொண்டு ஈமான் கொண்டேன். | وَرُسُلِهِ |
| ஒடுக்கத்து நாள் எனும் மறுமை நாளைக் கொண்டு ஈமான் கொண்டேன். | وَالْيَوْمِ الْاٰخِرِ |
| நன்மை, தீமை யாவும் அல்லாஹ்தஆலாவிலிருந்து உண்டாவது என்பதைக் கொண்டும் ஈமான் கொண்டேன் என்பதும் கலிமாக்களில் சொல்லப்பட்டிருக்கிற ஆறு காரியங்களும் ஈமானுடைய ஷர்த்துகளாயிருக்கும். | وَالْقَدْرِ خَيْرِهِ وَشَرِّهِ مِنَ اللهِ تَعَالٰى |

**ஈமானில் முந்தின ஷர்த்து:**

ஈமானில் முந்தின ஷர்த்தாகிறது: அல்லாஹ் தஆலாவைக் கொண்டு ஈமான் கொள்கிறது. அதில் அல்லாஹ் தஆலாவுக்கு வாஜிபாகிய தரிபாடாகிய ஸிபத்து இருப்பதையும், அதற்கு மாற்றமாகிய முஸ்தஹீலத்தான ஸிபத்து இருப்பதையும், இந்த இருவகை ஸிபத்துகளையும் தவிர உள்ள ஜாயிஸான ஸிபத்துகளையும் அறிந்து ஈமான் கொள்கிறது.

**அல்லாஹுத் தஆலாவிற்கு வாஜிபான ஸிபத்துகள் இருபது:**

அல்லாஹுத் தஆலா ஒருவன். அவனுடைய உள்ளமையிலும் வர்ணிப்புகளிலும் திருநாமங்களிலும் செயல்களிலும் இணை துணையில்லாதவன். இன்னும் அவனுக்கு தரிபாடான ஸிபத்து இருபது (20) அதாவது:

| | | | | |
|---|---|---|---|---|
| கேள்வி | سَمْعٌ | | உள்ளமை | وُجُوْدٌ |
| பார்வை | بَصَرٌ | | பூர்வீகம் | قِدَمٌ |
| பேச்சு | كَلَامٌ | | என்றைக்கும் தரிபாடு | بَقَا |
| உடல் அன்றியே ஜீவனுடையவன் | حَيٌّ | | புதியதுகளுக்கு ஒவ்வா வண்ணமாக இருக்கிறது | مُخَالَفَةٌ لِلْحَوَادِثِ |
| கல்பு அன்றியே அறிவுடையவன் | عَالِمٌ | | அவன் தன்னை கொண்டு அவன் நிலைபாடாக இருக்கிறது | قِيَامُهُ بِنَفْسِهِ |
| நப்ஸ் அன்றியே நாட்டம் உடையவன் | مُرِيْدٌ | | அவன் ஒருவன் என்று இருக்கிறது | وَحْدَانِيَّةٌ |
| ஆதாரம் அன்றியே தத்துவம் உடையவன் | قَادِرٌ | | ஜீவன் | حَيٰوةٌ |
| காது அன்றியே கேள்வி உடையவன் | سَمِيْعٌ | | அறிவு | عِلْمٌ |
| கண் அன்றியே பார்வை உடையவன் | بَصِيْرٌ | | நாட்டம் | اِرَادَةٌ |
| நாவு அன்றியே பேச்சு உடையான் | مُتَكَلِّمٌ | | தத்துவம் | قُدْرَةٌ |

ஆக இருபது (20).

**வாஜிபுக்கு மாற்றமான முஸ்தஹீலான ஸிபத்துகள் இருபது:**

இந்த முஸ்தஹீலான ஸிபத்துகள் அவனுக்கு அறவே இல்லை. அதாவது:

| | | | | |
|---|---|---|---|---|
| செவிடு | صَمَمٌ | | இல்லாமை | عَدَمٌ |
| குருடு | عَمٰي | | புதுசு | حُدُوْثٌ |
| ஊமை | بَكَمٌ | | அழிவு | فَنَا |
| இயலாதவனாக இருக்கிறது | كَوْنُهُ عَاجِزًا | | புதிதான படைப்புகளுக்கு ஒப்பாகிறது | مُمَاثَلَةُ لِلْحَوَادِثِ |
| நாடாதவனாக இருக்கிறது | مَكْرُوْهًا | | யாதொரு ஸ்தானத்தளவில் அல்லது முஹஸ்ஸில் அளவில் ஹாஜத்தாகிறது | اَلْاِحْتِيَاجُ اِلٰي مَحَلٍّ اَوْ مُخَصِّصٍ |
| அறியாதவனாக இருக்கிறது | جَاهِلًا | | தாத்திலும் ஸிபாத்திலும் அப்ஆலிலும் எண்ணிக்கை உண்டாயிருக்கிறது | اَلتَّعَدُّ |
| மவுத்தானவனாக இருக்கிறது | مَيِّتًا | | இயலாமை | عَجْزٌ |
| செவிடனாக இருக்கிறது | اَصَمُّ | | நாடாமல் இருக்கிறது | اِكْرَارٌ |
| குருடனாக இருக்கிறது | اَعْمٰي | | அறியாமை | جَهْلٌ |
| ஊமையனாக இருக்கிறது | اَبْكَمٌ | | சாவு | مَوْتٌ |

ஆக இந்த இருபதில் ஒன்றையாவது அவனுக்கு உண்டும் என்று சொன்னால் காபிராவான் நவூதுபில்லாஹி மின்ஹா. (அல்லாஹ் பாதுகாப்பானாக)

**ஜாயிஸான ஸிபாத்துகள்:**

முன் சொன்ன இருவகை ஸிபாத்துகளையும் தவிர உள்ள ஸிபாத்துகளாவது ஜாயிஸான ஸிபாத்தாக இருக்கும். இது அவனுக்கு உண்டாயிருக்குதலும் இல்லாதிருக்குதலும் ஆமாயிருக்கும். அதாவது

فِعْلٌ كُلِّ مُمْكِنٍ اَوْ تَرْكَهُ

இடம்பாடானது அடங்களையும் செய்கிறது அல்லது விடுகிறது. அவையாவன:

| | | | | |
|---|---|---|---|---|
| மூதேவியாக்குகிறது | وَالْاِشْقَاءِ | | வழிப்பட்டவனுக்கு தவாப் கொடுக்கிறது | كَالثَّوَابِ لِلْمُطِيْعِ |
| கொடுக்கிறது | وَالْاِعِطَاءِ | | மாறு செய்தவனை வேதனை செய்கிறது | وَالْعِقَابُ لِلْعَاصِيْ |
| கொடுக்காமல் இருக்கிறது | وَالْحِرْمَانِ | | ஆகிறத்தில் அவனை ஹல்குள் காணுகிறது | وَرُءْيِةِ الْخَلْقِ لَهُ عَزَّوَجَلَّ فَي الْاٰخِرَةِ |
| | | | சீதேவியாக்குகிறது | وَالْاِسْعَادِ |

இதுகள் போல் ஆனபோதே இதுகளில் ஒன்றையாவது அல்லாஹ் தஆலா செய்வது அல்லது விடுவது அவனுக்கு வாஜிபாகாது. இன்னும் அவனுக்கு மாதா, பிதா, மனைவி, மக்கள் அன்ன சுத்தம் இல்லை என்றும்; அவன் குடிப்பு உறக்கம் மறதி அழுகை சிரிப்பு நசல் சுவாத்தியம் பல நிறம் பல குணம் நீளம் அகலம் கட்டை நெட்டை ஆண் பெண் இது போல் உள்ள மட்டு திட்டங்கள் அடங்களை விட்டும் தூய்மையானவன் என்று அறிந்து ஈமான் கொள்கிறது.

**ஜாயிஸான ஸிபத்துகளில் ஷாபியி மத்ஹபுக்கும் ஹனபி மத்ஹபுக்கும் உள்ள கருத்து வேறுபாடு:**

ஜாயிஸாகிய ஸிபத்தில் اَشْعَرِيَّة எனும் ஷாபியி மத்ஹபுடையவர்களுக்கும் مَاتُرِيْدِيَّة எனும் ஹனபி மத்ஹபுடையவர்களுக்கும் ஹிலாப் (கருத்து வேற்றுமை) உண்டு. இந்த ஹிலாபின் விபரமாவது ஹனபி மத்ஹபின் படி

حَيٰوةُ عِلْمُ اِرَادَةُ قُدْرَةُ بَصَرٌ كَلَامٌ

இந்த மஆய்யா ஏழு ஸிபாத்துகளுடன் تَكْوِيْنْ எனும் ஷிபத்தையும் சேர்த்து எட்டு ஸிபத்துகளும் வாஜிபாயிருக்கும். தக்வீனாகிறது இல்லாத வஸ்துவை இல்லாமையில் நின்றும் உண்டேன்கிறத ள வில் வெளிப்படுத்தி வைக்குதல் என்னும் உண்டாக்கி வைக்குதல் படைக்குதல் சூரத்தாக்குதல், ஹயாத்தாக்குதல் இது போல் ஒத்த செயலோடும் கூடிய ஸிபத்துகள் அடங்களும் தக்வீன் எனும் ஸிபத்தளவில் மீழுகிறதாக இருக்கும்.

ஷாபியி மத்ஹபின்படி செயலோடும் கூடிய ஸிபத்துகள் எல்லாம் குத்ரத் எனும் ஸிபத்தளவில் மீளுகிறதாயிருக்கும். ஆனதால் தக்வீன் எனும் ஸிபத்து வாஜிபில்லை. ஆனபோதே செயல்களை வெளியாக்கிறதும் வெளியாக்காதிருக்கிறதும் இரண்டு மத்ஹபின்படிக்கும் ஜாயிஸாக இருக்கும். ஹிலாபாகிறது எல்லாம் தக்வீன் எனும் ஒரு ஸிபத்து உண்டு என்றும் அதன் அளவில் தான் செயல்கள் எல்லாம் மீளுகிறது என்றும் தக்வீன் என்னும் ஸிபத்து இல்லை என்றும் குத்ரத் என்னும் ஸிபத்தளவில் தான் செயல்கள் எல்லாம் மீளுகிறது என்றும் விவரிக்கிறதாக இருக்கும்.

**ஈமானுடைய இரண்டாவது ஷர்த்து:**

ஈமானுடைய இரண்டாவது ஷர்த்தாகிறது மலாயிக்கத்துகளை கொண்டு ஈமான் கொள்கிறது. மலாயிக்கத்துகள் அடங்களும் அல்லாஹுத் தஆலாவுடைய அடியார்கள். ஒளிவினால் படைக்கப்பட்டவர்கள். அவனுடைய ஏவலுக்கு மாறு செய்யமாட்டார்கள். ஏவப்பட்டதை செய்வார் கள். அவர்களுடைய சுபாவம் வழிப்பாடாக இருக்கும். அவர்கள் ஆணுமில்லை, பெண்ணுமில்லை, திருவாணியுமில்லை. இன்னும் அவர்களுக்கு தீன் குடிப்பு மாதா பிதா மனைவி மக்கள் யாதொன்றும் கிடையாது. அவர்களுக்கு சிறகுகள் உண்டும். பல பல கோலங்கள் கொண்டு குணங் கொள்ளுகிறதின் பேரிலும் சக்தி பெற்றவர்கள். அதிகமாக அவர்கள் இருக்கும் இடமாவது வானமாக இருக்கும். சிலர் பூமியில் இருப்பார்கள். அல்லாஹ் தஆலாவை தொட்டும் விஷயங்கள் அறிவிக்கிறதில் உண்மை சொல்பவர்கள். அவர்களுடைய ஆலம் ஜின்னு மனுவு மற்றும் ஆலம் அடங்களைக் காணவும் ரொம்ப மிகுதமாக இருக்கும். அவர்களுடைய வலுப்பத்தையும் எண்ணிக்கையையும் அல்லாஹுத் தஆலாவைத் தவிர யாரும் அறியார்கள். ஆகிலும் அவர்களில் நாம் எட்டு பேரை விபரமாய் அறிவது வாஜிபாக இருக்கும்.

ஒன்றாவது நபிமார்கள் அளவில் வஹி கொண்டு சாட்டப்பட்ட ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்.

இரண்டாவது மலைகள் கடல்கள் ஆறுகள் இரணங்கள் அளக்கிறது கொண்டும் கா்ப்பங்களிலே பிள்ளைகளை சூரத்தாக்கிறது கொண்டும் சாட்டப்பட்ட மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்.

மூன்றாவது லவ்ஹுல் ம.்.பூலைக் கொண்டும், சூா் ஊதுகிறது கொண்டும் சாட்டப்பட்ட இஸ்ராபீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்.

நாலாவது ஹல்குகளுடைய ரூஹுகளை கைப்பற்றுதல் கொண்டு சாட்டப்பட்ட இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்.

ஐந்தாவது சுவர்க்கத்திற்கு அதிபதியாகிய ரிழ்வான் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்.

ஆறாவது நரகத்திற்கு அதிபதியாகிய மாலிக் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்.

ஏழாவது எட்டாவது அடியார்களில் நின்றும் உண்டாகும் சொல் செயல் நிர்ணயங்களை ஹிப்ழ் செய்து கொள்ளும் படியான ரகீப் அதீத் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் என்று ஒவ்வொரு வருடங்களுக்கும் பெயர் சொல்லப்பட்ட இரண்டு மலக்குகள் இன்னும் அர்சை சுமந்தவர்கள் சூழ்ந்தவர்கள் மற்றும் மலாயிகத்துகள் அடங்களை கொண்டும் ஈமான் கொள்கிறது.

**ஈமானுடைய மூன்றாவது ஷர்த்து:**
ஈமானுடைய மூன்றாவது ஷர்த்தாவது வேதங்களைக் கொண்டு ஈமான் கொள்கிறது. வேதங்கள் சுஹுபுகள் அடங்களும் அல்லாஹுத் தஆலாவில் நின்றும் அன்பியாக்கள் பேரில் இறக்கப்பட்டதாகவும் அவனுடைய கலாமாகவும் கதீமானதாகவும் இருக்கும். அந்த வேதங்கள் சுஹுபுகள் அடங்களையும் நம்முடைய புர்கான் வேதத்தைக் கொண்டு மாற்றப்பட்டது. புர்கான் கியாம நாள் அளவும் பாக்கியாக இருக்கும்.

இனி அல்லாஹ் தஆலா 100 சுகுபும் 4 வேதமும் இறக்கினான். அதில்
ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு 10 சுகுபுகளும்
ஷீது அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு 50 சுகுபுகளும்
இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு 30 சுகுபுகளும்
இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு 10 சுகுபுகளும் ஆகும்.

தவ்ராத் வேதம் அப்ரானி பாஷையில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும்
ஜபூர் வேதம் யுனானி பாஷையில் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும்
இன்ஜீல் வேதம் சுர்யானி பாஷையில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும்
குர்ஆன் வேதம் அரபி பாஷையில் நம்முடைய நாயகம் முஹம்மது முஸ்பதா அஹ்மது முஜ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் இறக்கினான் என்று ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது.

இன்னும் ஒரு ரிவாயத்தில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தவ்ராத்து வேதத்திற்கு முன் பத்து சுகுபுகளும் இறக்கினான் என்றும் வந்திருக்கிறது. இன்னும் சுகுபுகளுடைய எண்ணிக்கையில் ரிவாயத்துகள் இஹ்திலாபாக இருக்கின்றது. ஆனதால் நாலு வேதத்தையும் தவிர மற்றும் சுகுபுகளுடைய எண்ணிக்கையை குறையாமல் மொத்தமாக வேதங்கள் சுகுபுகள் அடங்களை கொண்டும் ஈமான் கொள்ள வேண்டும்.

**ஈமானுடைய நாலாவது ஷர்த்து:**

ஈமானுடைய நாலாவது ஷர்த்தாகிறது ரஸூல்மார்களை கொண்டு ஈமான் கொள்கிறது. ரஸூல்மார்கள் அடங்களும் அல்லாஹ் தஆலாவுடைய அடியார்கள்; பாவங்களை விட்டும் காக்கப்பட்டவர்கள். இனி அவர்களுக்கு வாஜிபான ஸிபத்துகள் 4 உண்டு. அதாவது:

| | | | | |
|---|---|---|---|---|
| ஏவப்பட்டதை எத்தி வைக்குதல் | تَبْلِيْغُ | | உண்மை | صِدْقُ |

| | | | | |
|---|---|---|---|---|
| அக்லு கூர்மை | فَطَانَةَ | | கார்மானம் | اَمَانَةَ |

ஆன போதே, இதற்கு மாற்றமாக ஸிபாத்து நாலும் அவர்களுக்கு அறவே கிடையாது. முஸ்தஹீலாகிய ஸிபாத்து. அதாவது:

| | | | | |
|---|---|---|---|---|
| ஏவப்பட்டதை மறைக்கிறது | كِتْمَانْ | | பொய் | كِذْبٌ |
| அக்ளுலு கூர்மை இழந்திருக்கிறது | بِلَادَةٌ | | விலக்கப்பட்ட கர்மத்தை செய்கிறது | خِيَانَةٌ |

இனி அவர்களுடைய மேலாம்பரமாகிய மர்தபாக்களை குறைச்சல் ஆகாது. மனிதரின் குணங்கள் அவர்களுடைய ஹக்கில் ஜாயிஸாக இருக்கும். அதாவது:

| | | | | |
|---|---|---|---|---|
| விவாகம் | وَالتَّزَوُّج | | ஊன் | كَالْأَكْلِ |
| புணர்ச்சி | وَالجِمَاع | | குடிப்பு | وَالشُّرْبِ |
| லேசாகிய நசல் | وَالْمَرْضِ الخَفِيْفِ | | விற்பனை | وَالْبَيْع |
| | | | கொள் வினை | وَالشِّرَاءِ |

இதுகளைப்போல், ثُمَّ اِعْلَمْ பின்னர் அறிந்து கொள் ரஸுல்மார்களுடைய ஹக்கில் சொல்லப்பட்டதே அந்த உன்னதங்களையும் நபிமார்களுடைய ஹக்கிலும் சொல்லப்பட்ட தப்லீகையும் அதினுடைய மாற்றத்தையும் தவிர. இனி நபிமார்கள் லட்சத்தி இருபத்தி நாலாயிரம் என்றும் அதில் முர்சலான நபிமார்கள் முன்னூற்றி பதிமூன்று என்றும் முன்னூற்றி பதினான்கு என்றும் முன்னூற்றி பதினைந்து என்றும் இஹ்திலாப் உண்டாகி இருப்பதினால் அவர்களை எண்ணிக்கையில் மட்டிடாமல் மொத்தமாக நபிமார்கள் ரஸுல்மார்கள் அடங்களை கொண்டு ஈமான் கொள்கிறது.

**ஈமானுடைய ஐந்தாவது ஷர்த்து:**

ஈமானுடைய ஐந்தாவது ஷர்த்தாவது ஒடுக்கத்து நாளை கொண்டு ஈமான் கொள்கிறது. ஒடுக்கத்து நாள் ஒரு நாள் என்றும் அதற்கு துவக்கம் ஹஸ்ருடைய வக்து தொடுத்து ஒரு தீர்மானம் இல்லாதவரையிலாக இருக்கும். இன்னும் அதினுடைய அடையாளங்களை முகத்தமாக்களில் நின்றும் திக்ரு செய்யப்பட்ட தடங்களும் ஹக்கானதாக இருக்கும். அல்லாஹ் தஆலா அந்த நாளில் ஹல்குகளை எல்லாம் எழுப்பி மஹ்ஸர் வெளியிலே நிறுத்தி கேள்வி கணக்கு கேட்டு மு.ஃமினானவர்களை தன்னுடைய வருஷை கொண்டு சொர்க்கம் புகுத்துவிப்பான். காபிர்களை அவனுடைய நீதம் கொண்டு நரகம் புகுத்து விப்பான். பாவியாகிய மு.ஃமீன்களில் அவன் நாடின பேர்களை அதாபு இல்லாமல் சொர்க்கம் புகுத்துவிப்பான். அவன் நாடின பேர்களை நரகம் புகுத்து விட்டு அதாபு செய்து பின்னாலே அவர்களையும் சொர்க்கம் புகுத்துவிப்பான். காபிர்களை நரகத்தை விட்டும் புறத்திப் படுத்தப் படாது. அதிலேயே ஊழிப்பதியாய் கிடப்பார்கள் என்று ஈமான் கொள்கிறது.

**ஈமானுடைய ஆறாம் ஷர்த்து:**

ஈமானுடைய ஆறாவது ஷர்த்தாகிறது கற்பனையை கொண்டு ஈமான் கொள்கிறது. கற்பனை ஆலத்தில் உள்ள சொல் செயல் நலவு தீங்கு ஈமான் குப்ர் வழிபாடு பாவம் தங்கடம் பிரயோஜனம் மற்றும் கர்மங்கள் அடங்களும் அல்லாஹ் தஆலாவுடைய கற்பனை நாட்டம் கொண்டாயிருக்கும். அவனுடைய கற்பனையை விட்டும் நாட்டத்தை விட்டும் யாதொன்றும் பிறப்படாது. எங்கிலும் அவனுடைய முஹப்பத்தும் பொருத்தமும் ஏவலும் நன்மையிலே அல்லாது தீமையிலே கிடையாது. அடியார்களுக்கு அவர்களுடைய செயல்களில் தெரிவுதளை கொடுக்கப்பட்டிருப்பதால் நன்மை செய்தால் தவாபும் தீமை செய்தால் அதாபும் கொடுக்கப்படும் என்று அறிந்து ஈமான் கொள்வது.

**பாப் பீ பயானில் இஸ்லாம்:**

இஸ்லாமுடைய பயானில் பேசும் பாடம்.

قَالَ اللهُ تَعَالٰي اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِيْ وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامِ دِيْنًا

ஏ.ஃ.னி (அதாவது) இஸ்லாம் எனும் மார்க்கத்தை உங்களுக்கு மார்க்கமாக பொருந்தி உங்கள் மீதில் என்னுடைய நி.ஃ.மத்தை தமாமாக்கி உங்கள் தீனை இன்று நிறப்பமாக்கினேன் என்றும் அல்லாஹுத் தஆலா குர்ஆனில் திருவுளமானான்.

اَلْاِسْلَامُ اَلْاِنْقِيَادُ لِاَوَامِرِ اللهِ تَعَالٰي وَالْاِجْتِنَابُ عَنْ نَوَاهِيْهِ

ஏ.ஃ.னி (அதாவது) இஸ்லாமகிறது அல்லாஹ் தஆலாவுடைய ஏவல்களுக்கு வழிப்பட்டு அவனின் விலக்கல்களை விட்டும் தவிர்ந்து கொள்கிறதாக இருக்கும்.

قَالَ النَّبِيُّ صَلَّي اللهُ عَلَيْهِ وَسَلَّمْ

ஏ.ஃ.னி (அதாவது) நபி நாயகம் ஸல்லல்லாஹுஃ அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்:

بُنِيَ الْاِسْلَامُ عَلٰي خَمْسٍ

இஸ்லாமை ஐந்து காரியத்தின் பேரில் தெரிந்து எடுக்கப்பட்டது.

1. شَهَادَةُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللهُ وَاَنَّ مُحَمَّدًا رَسُوْلُ اللهِ
   அல்லாஹ் தஆலாவைத் தவிர உண்மையாக வணக்கத்திற்கு பாத்திரமானவன் யாருமில்லை என்றும், உண்மையாக முஹம்மது ஸல்லல்லாஹுஃ அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ் தஆலாவுடைய திருத்தூதராக இருக்கும் என்று பிஷகர அறிந்து விண்ணப்பம் செய்கிறது.
2. وَاِقَامُ الصَّلٰوةِ
   தொழுகையை நிலைப்பாடாக கொண்டு வருகிறது.
3. وَاِيْتَاءُ الزَّكٰوةِ
   ஜகாத் கொடுக்கிறது.
4. وَصَوْمُ رَمَضَانَ
   ரமலான் மாதம் நோன்பு பிடிக்கிறது.
5. وَحَجُّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ اِلَيْهِ سَبِيْلًا

க.ஃ.பதுல்லாஹ்வுக்குப் போய் ஹஜ்ஜுஃ செய்ய சக்தி பெற்றவர்கள் ஹஜ்ஜுஃ செய்கிறது.

ஆனபோதே இஸ்லாமுடைய தூண்கள் ஐந்தாக இருக்கும். அதில் முந்தின தூணாகிய கலிமா ஷஹாதத்திற்கு 4 ருக்ன் (தூண்கள்) உண்டு. அதாவது அல்லாஹ் தஆலாவுடைய தாத்தையும் ஸிபாத்தையும் அப்ஆலையும் ரஸுஃலுல்லாஹ் உடைய உண்மையையும் தரிப்படுத்துகிறது.

அவைகளில் ஒன்றாவது اِثْبَاتُ ذَاتِ اللهِ تَعَالٰي அல்லாஹ் தஆலாவின் தாத்தை தரிப்படுத்துகிறது. அதாவது அல்லாஹ் தஆலாவாகிறன் مَوْجُوْدٌ உள்ளமை உடையவன். قَدِيْمٌ பூர்வீகமானவன். ஏ.ஃ.னி அவனுடைய உள்ளமைக்கு துவர்க்கமில்லாதவன். بَاقٍ எப்போதும் தரிபாடானவன். ஏ.ஃ.னி அவனுடைய உள்ளமைக்கு அழிவில்லாதவன். مُخَالِفَةٌ لِلْحَوَادِثِ புதுசான படைப்புகள் அடங்களுக்கும் ஒவ்வா வன்னமானவன். ஏ.ஃ.னி தாத்திலும் ஸிபாத்திலும் அப்ஆலிலும் ஒப்புவமை இல்லாதவன் قَائِمٌ بِنَفْسِهِ தன்னை கொண்டு நிலைப்பாடானவன். ஏ.ஃ.னி பிறர் அளவில் ஹாஜத்தாகாதவன். ஆனபோதே அல்லாஹ் தஆலா திசையை விட்டும் தலத்தை விட்டும் தூயவன். وَاحِدٌ ஒருவனானவன் என்று ஈமான் கொள்வது.

இரண்டாவது اِثْبَاتُ صِفَاتِ اللهِ تَعَالٰي அல்லாஹ் தஆலாவின் ஸிபாத்தை தரிபடுத்துகிறது. அல்லாஹ் தஆலாவாகிறவன் حَيٌّ بِحَيَاتِهِ தன் ஹயாத்து கொண்டு ஹயாத்துடையவன். ஏ.ஃ.னி ரூஹ் கொண்டு அல்ல. عَالَمٌ بِعِلْمِهِ தன் அறிவு கொண்டு அறிகிறவன். ஏ.ஃ.னி கல்பில் தரிபாடாகிய கைபிய்யத்து கொண்டு அல்ல. مُرِيْدٌ بِاِرَادَتِهِ தன் நாட்டம் கொண்டு நாடுகிறவன்; ஏ.ஃ.னி கல்பு கொண்டு அல்ல. قَادِرٌ بِقُدْرَتِهٖ தன் குத்ரத்து கொண்டு சக்தி உள்ளவன். ஏ.ஃ.னி உறுப்புகளை கொண்டும் பிறரைக் கொண்டும் அல்ல. سَمِيْعٌ بِسَمْعِهٖ தன் கேள்வி கொண்டு கேட்கிறவன். ஏ.ஃ.னி காது கொண்டு அல்ல. بَصِيْرٌ بِبَصَرِهٖ தன் பார்வை கொண்டு பார்க்கிறவன். ஏ.ஃ.னி கண் கொண்டு அல்ல. مُتَكَلِّمٌ بِكَلَامِهٖ தன் பேச்சு கொண்டு திருவசனமுடையவன். ஏ.ஃ.னி நாவு கொண்டு அல்ல என்று ஈமான் கொள்கிறது.

மூன்றாவது اِثْبَاتُ اَفْعَالِ اللهِ تَعَالٰي அல்லாஹ் தஆலாவுடைய செயல்களை தரிப்படுத்துகிறது. அதாவது அல்லாஹ் தஆலாவாகிறவன் مُوْجِدٌ இல்லாமையில் நின்றும் வஸ்துகளை உண்டாகிறதளவில் வெளிப்படுத்துகிறவன் مُعْدِمٌ உண்டாகிய வஸ்துகளை இல்லாமல் ஆக்குகிறவன் خَالِقٌ படைக்கிறவன் رَازِقٌ இரணம் கொடுக்கிறவன் مُحْيٌ மவ்த்தானவர்களை ஹயாத்தாக்குகிறவன் مُمِيْتٌ ஹயாத்தானவர்களை மவ்த்தாக்குகிறவன் هَادٍ நேர் வழி காட்டுகிறவன் مُضِلٌّ வழி கெடுக்கிறவன் مُنْعِمٌ சுகமாக்குகிறவன் مُنْتَقِمٌ வேதனை செய்கிறவன் மற்றும் செயலோடும் கூடிய ஸிபாத்துகளை கொண்டு ஈமான் கொள்கிறது.

நான்காவது اِثْبَاتُ صِدْقِ رَسُوْلُ اللهِ عَلَيْهِ وَسَلَّمْ ரஸுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உண்மையை தரிப்படுத்துவது. அதாவது உண்மையாக கப்ருடைய அதாபு உண்டு என்கிறது; முன்கர் நகீருடைய கேள்வி உண்டென்கிறது; ஹஸரு நஸரு உண்டென்கிறது; நன்மை தீமை நிறுக்கும் தராசு உண்டென்கிறது; சிராத்துல் முஸ்தகீம் பாலம் உண்டென்கிறது; சுவர்க்கம் நரகம் படைக்கப்பட்டிருக்கிறது என்கிறது. இன்னும் அவர்கள் அறிவிப்பு விஷயம் அடங்களிலும் உண்மை சொன்னார்கள் என்று ஈமான் கொள்கிறது.

**பாப் பீ பயானில் ஒலு:**

இது ஒலுவுடைய பயானிலே பேசும் பாடம்.
قَالَ النَّبِيُّ صَلَّي اللهُ عَلَيْهِ وَسَلَّمْ اَلطُّهُوْرُ شَطْرُ الْاِيْمَانِ
ஏ∴னி துப்புரவாகிறது ஈமானில் பாதியாக இருக்கும் என்றும்
قَالَ اَيْضًا صَلَّي اللهُ عَلَيْهِ وَسَلَّم مِفْتَاحُ الْجَنَّةِ الصَّلٰوةُ وَمِفْتَاحُ الصَّلٰوةِ الطُّهُوْرُ

ஏ∴னி சுவர்க்கத்திற்கு திறவுகோல் தொழுகையாக இருக்கும். தொழுகைக்கு திறவுகோல் துப்புரவாக இருக்கும் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள். இன்னும் ஹதீதில் வந்திருக்கிறது ஒரு மனிதன் ஒலு செய்ய நாடி முகத்தை கழுகினால் பார்வையால் ஏற்பட்ட பாவம் அடங்களும், இரண்டு கையையும் கழுகினால் கையால் தொட்ட பாவம் அடங்களும், இரண்டு காலை கழுகினால் காலால் தொட்ட பாவம் அடங்களும், ஒலு செய்த உருப்புகளில் இருந்து விழுகிற தண்ணீர் துளிகளிருந்தும் நீங்கிப்போய் விடும் என செய்யிதுனா ஷபீவுல் முத்னிபீன் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளம் பற்றினதாக ஸஹீஹ் முஸ்லிம் கிதாபில் சொல்லப்பட்டிருக்கிறது. இனி ஒலுவின் ஷர்த்துகளை முழுக்குடைய ஷர்த்துகளுடன் கூறப்பட்டிருக்கின்றது.

**பர்ளான ஒலுவும் வாஜிபான ஒலுவும் முஸ்தஹப்பான ஒலுவும்:**

அதாவது தொழுகைக்கு ஒலு செய்கிறது பர்ளு, க∴பாவை சுற்றி தவாபு செய்வதற்கும் குர்ஆனை தொடுவதற்கும் ஒலு செய்வது வாஜிபு. குர்ஆன் ஹதீது இல்மு இவைகளை ஓதுகிறதற்கும் பாங்கு இகாமத்து சொல்கிறதற்கும் அல்லாஹ் தஆலாவை திக்ரு செய்கிறதற்கும் நபிகள் நாயகத்தை ஜியாரத் செய்வதற்கும், அரபா மலையில் தறிபடுகிறதற்கும், ஸபா மர்வாவில் ஓடுகிறதற்கும் ஷர்யியான புனித கிதாபுகளை தொடுகிறதற்கும் குத்பா ஓதுகிறதற்கும் இன்னும் இது போல் ஒத்த காரியங்கள் அடங்களுக்கும் ஒலு செய்கிறது முஸ்தஹப்பாக இருக்கும்.

**ஒலுவின் ஷர்த்துக்கள் இரண்டு:**

1. ஒலுவுடைய உருப்புகளில் தண்ணீரை விலக்குகின்ற சந்தனம், மாவு, மீன் சிலாம்பு, கட்டி சுன்னாம்பு முதலானது இல்லாமல் இருக்கின்றது.
2. இஸ்லாமாக இருக்கின்றது.

**ஒலுவின் பர்ளுகள் நான்கு:**

1. முகத்தை நெற்றி மேல் புறம் இருந்து நீலத்தால் நாடி குளி வரையிலும் வலது காதில் இருந்து அகலத்தால் இடது காது வரையிலும் இடை விடாமல் ஒரு விடுத்தம் நன்றாய் கழுவுகிறது.
2. இரண்டு கையையும் முழங்கை உட்பட கழுவுகிறது.
3. தலையில் நான்கில் ஒரு பங்கு காதின் எல்கைக்கு மேல் மஸ்கு செய்கிறது.
4. இரண்டு கால்களுக்கும் கரண்டை உட்பட கழுவுகிறது.

**ஒலுவின் சுன்னத்துக்கள் பதிமூன்று:**

1. அல்லாஹ் தஆலாவின் ஏவலுக்கு தலை சாய்த்து துடக்கை நீக்குவதற்காக ஒலு செய்கிறேன் என்று நிய்யத் வைக்கிறது.
2. அஊதுடன் பிஸ்மி சொல்லுகிறது.
3. இரு கையையும் மணிக்கட்டு வரையில் கழுவுகிறது.
4. மிஸ்வாக்கு செய்கிறது.
5. பூர்த்தியாக வாய் கொப்பளிக்கிறது.
6. நாசி இரண்டிலும் தண்ணீர் செலுத்துகிறது.
7. தாடி அடர்ந்திருந்தால் கீழ்புறமிருந்து கொதுகிறது.
8. களுகப்பட்ட உருப்புகளை புதிதாகிய தண்ணீர் கொண்டு மூன்று விடுத்தம் களுவுகிறது.
9. மூன்று தடவை களுகினபின் கை கால் விரல்களை தண்ணீரால் கொதுகிறது.
10. தலை அடங்களும் மஸ்ஹு செய்கிறது.
11. தலைக்கு எடுத்த தண்ணீரால் இரு காதுக்கும் மஸ்ஹு செய்கிறது.
12. பர்ளாகிய உருப்புகளை இதில் சொல்லி இருக்கிற படி வொழுங்காக கொண்டு வருகிறது.
13. உருப்புகள் காய்கிறதற்கு முன் தொடராக கொண்டு வருகிறது.

**ஒலுவின் முஸ்தஹப்புகள்:**

கிப்லாவை முன்னோக்குதலும், தலையில் ஒன்றும் இல்லாமல் ஒலு செய்கிறதும், வலது உருப்புகளை முற்படுத்துவதும், இரு புறங்கை கொண்டு பிறடிக்கு மஸ்ஹு செய்கிறதும், தண்ணீரை அதிகம் செலவு செய்யாமல் இருப்பதும், அல்லாஹ் உடைய திருநாமங்கள் எழுதின மொதிரங்களை களற்றி கொள்வதும், நிய்யத்துடன் ஒலு செய்கிறேன் என்று நாவால் சொல்வதும், மேட்டின் மீது இருந்து ஒலு செய்வதும், வக்து வருமுன் ஒலு செய்வதும், ஒலுவில் உதவி தேடாமல் இருக்கிறதும், முகத்தில் தண்ணீரை அடிக்காதிருக்கிறதும், தண்ணீர் பாத்திரம் சிறிதாக இருந்தால் இடது புறத்திலும், கையால் அள்ளி ஒலு செய்யும்படியான பெரிய பாத்திரமாக இருந்தால் வலது புறத்திலும் ஆக்கி கொள்கிறதும், வாயிக்கும் நாசிக்கும் வலது கை கொண்டு தண்ணீர் வாங்கி எடுத்து கை கொண்டு மூச்சு சிந்தவும் உருப்புகளை தெய்கிறதும் முகத்தின் மேல் புறத்தை கொண்டும் விரலின் அருகை கொண்டும் களுகுதளை துவர்க்கம் செய்கிறதும், காதிற்கு மஸ்ஹு செய்யும் போது சின்ன விரலை காதின் துவாரத்தில் ஆக்கி கொள்கிறதும், துண்யா உடைய பேச்சுகளை அவசியம் இன்றி பேசாமல் இருக்கிறதும், ஒவ்வொரு உருப்பையும் களுகும் போதும் பிஸ்மில்லாஹ் ஸலவாத்து ஸஹாதா ஓதுவதும், விஸ்தீரணமான மோதிரத்தை திருப்பிக்கொள்வதும், ஒலு செய்து முடிந்த பின் கிப்லாவை முன்னோக்கி நின்று அல்லது இருந்து ஒலுவின் மிச்சத் தண்ணீரில் கொஞ்சம் குடிப்பதும், ஒலுவிற்குப்பின் பர்ஜை தொடாதிருக்கிறதும், உள்ளங்கால் பல்லம் வல் கொய்ராவை ஆராயிரதும், இன்னா அன்ஜல்னா ஓதுகிறதும், ஒலுவிற்குப் பின் கிப்லாவை முன்னோக்கி துஆ ஓதுகிறதும், ஒலு செய்யும் போது ஒவ்வொரு உருப்பிற்கும் ஓத வேண்டிய துஆக்களை ஓதுவதும் முஸ்தஹப்பு. இன்னும் இவைகள் போல் அநேக முஸ்தஹப்புகள் உண்டு.

**ஒலுவின் மக்ரூஹ்கள் எட்டு:**

1. முகம் அல்லது அது போல் ஒத்த உருப்புகளை தண்ணீர் கொண்டு அடிப்பதும்.
2. தண்ணீரை தன் ஹாஜத்திற்கு மேல் அதிகம் செலவு செய்கிறதும்.
3. மூன்று விடுத்தத்திற்கு மேல் உருப்புகளை கழுவுகிறதும் அல்லது குறைக்கிறதும்.

4. மஸ்ஹு செய்யப்பட்ட உருப்புகளை புதிய தண்ணீரைக் கொண்டு மூன்று விடுத்தம் மஸ்ஹு செய்வதும்.
5. நஜீஸான இடத்தில் இருந்து ஒலு செய்வதும்.
6. பெண் பிள்ளைகள் ஒலு செய்த மிச்ச தண்ணீரைக் கொண்டு ஆண் பிள்ளை ஒலு செய்கிறதும்.
7. தண்ணீரில் காரல் மூக்கு சலிகளை எறிவதும்.
8. பிள்ளைகளை தண்ணீர் சிந்தும்படி ஒலு செய்வதும்

மக்ரூஹ்.

**ஒலுவின் முறித்தல்கள் ஒன்பது:**

1. முன் துவாரம் பின் துவாரத்தில் இருந்து யாதொரு வஸ்து புறப்படுகிறது.
2. சரீரத்தில் நின்றும் யாதொரு இரத்தம் ஹைளு சலம் புறப்பட்டு காயத்தை விட்டும் வழிந்தோடுகிறது.
3. வாய் நிறம்ப வாந்தி எடுக்கிறது.
4. இருப்பிடம் பூமியை விட்டு நீங்கும்படி இருந்து ஒரு வஸ்துவில் பிலமாக சாய்நத்து நித்திரை செய்கிறது.
5. பைய்த்தியம் பிடிக்கிறது.
6. பொதக்கேடாகிறது.
7. ஒரு வஸ்துவை தின்று போதையாகிறது.
8. ரூகூஹ் சுஜூது உடைய தொழுகையில் பாலிகானவர்கள் முளிப்புடன் வெடி சிரிப்பு சிரிக்கிறது.
9. தகர் உசும்புதளுடன் ஆணும் பெண்ணும் அல்லது ஆணும் ஆணும் அல்லது பெண்ணும் பெண்ணும் திரையின்றி வெட்கஸ்தளம் ஒன்றொடு ஒன்று சந்திக்கிறது.

**ஒலுவில்லார்க்கு மூன்று செயல் ஹராம்:**

1. தொழுகிறது.
2. க.்.பாவை சுற்றி தவாபு வருகிறது.
3. உரையில்லாமல் குர்ஆனை தொடுகிறது. அது ஒரு ஆயத்தான இருந்தாலும் சரி.

**பாப் பீ பயானில் ஞொசுல்:**

முழுக்குடைய பயானை பேசும் பாடம். இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களைத் தொட்டும் பேசி வரப்படுகிறது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள் இரண்டு பேர்களும் சேர்ந்து கத்னாவரை மறைந்தால் மணி இறங்கினாலும் இறங்கா விட்டாலும் இரண்டு பேர் மீதிலும் முழுக்கு விதியாய் விட்டது என்று திருவுளம் பற்றினார்கள்.

قَالَ اللهُ تَعَالٰي وَاِنْ كُنْتُمْ جُنُبًا فَاطَّهَّرُوا

அல்லாஹ் தஆலா குர்ஆனில் திருவுளமானான் ஜுனுபாக இருந்தால் துப்புரவாக்கி கொள்ளுங்கள் என்று. அபுஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்து செய்யப் பட்டிருக்கிறது அவர்கள் சொன்னார்கள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள் ஒவ்வொரு முடியடங்களுக்கும் தாலாலே ஜனாபத் இருக்கிறது. ஆனதால் முடியடங்களையும் கழுகுங்கள். மேனியை வெட்டிப்பாக்குங்கள் என்று.

**முழுக்கை விதியாக்கும் கருமம் ஐந்து:**

1. நித்திரையில் அல்லது முழிப்பில் இந்திரியம் ஆன் பிள்ளையின் முதுகன்தந்டிலிருந்தும் பெண் பிள்ளையின் நெஞ்சங்குளியில் இருந்தும் பிறப்படுகிறது.

2. ஜிமாவிற்கு தகுமான ஹயாத்தான மனிதரின் இரு துவாரத்திலிருந்து தககுருடைய வரம்பு மறையும்படி சேர்க்கை செய்கிறது.
3. நித்திரையில் ஹரக்கத் உண்டாக்கி இஹ்திலாம் ஆகிரது என்பது நியாபகம் இருந்தாலும் இல்லாது இருந்தாலும் முளித்த உடன் தன் துணியல் அல்லது துடையில் மணி அல்லது வடி ஈரத்தை காண்கிறது.
4. ஹைலு நிருக்கிறது.
5. நிபாஸ் என்னும் பேருகாலம் துடக்கு நிற்கிறது.

**முழுக்குடைய பர்ளு மூன்று:**

1. வாயை நன்றாய் கலுவுகிறது.
2. நாசிக்கு தண்ணீர் செலுத்துகிறது.
3. தொப்புள் மேல் மீசை புறுவம் தாடி தலை ரோமங்கள் பெண்பிள்ளைகள் உட்காரும் போது வெளியில் தெரியும்படியாகிய அபம் உட்பட நன்றாய் நினையும்படி கலுவுதல்.

**முழுக்கின் சுன்னத்துகள் ஏழு:**

1. என் பெயரில் உள்ள ஜனாபத்து என்னும் பெரும் துடக்கை நீக்குவதற்காக அல்லாஹ் தஆலாவின் ஏவலுக்கு வலிபடுகிறேன் என்று நிய்யத்து வைக்கிறது.
2. பிஸ்மி சொல்லுகிறது.
3. இரு கையையும் மணிக்கட்டு வரை கழுகிறது.
4. முன் பின் துவாரத்தை கழுகிறது.
5. சரீரம் துணி மணிகளின் நஜீஸை கழுவுகிறது.
6. ஒலு செய்கிறது.
7. தலையிலும் இரு தோலிலும் சரீரம் அடங்களின் பேரிலும் மும்மூன்று விடுத்தம் தண்ணீர் வார்க்கிறது (அதாவது, ஊற்றுகிறது).

**மூன்று வகுப்பார்கள் பேரில் குசுல் பர்ளாகும்.**

1. மய்யித்தை குளிப்பாட்டுகிறதும்.
2. ஜுனுபாக இஸ்லாம் மார்க்கத்தில் வந்தவன் குளிக்கிறதும்.
3. இன்ஜாலைக் கொண்டு அல்லது ஹைலைக் கொண்டு பாலிகான சிறு பிள்ளை குளிக்கிறதும் ஆகும்.

**சுன்னத்தான குசுல்கள் நான்கு:**

1. ஜும்ஆ தொழுகைக்கு குளிக்கிறது.
2. இரு பெருநாள் தொழுகைக்கு குளிக்கிறது.
3. ஹஜ்ஜுக்கு இஹ்ராம் கட்டும் போது குளிக்கிறது.
4. அரபாவில் இருக்கும் போது குளிக்கிறது.

**முஸ்தஹப்பான குசுல்கள் பதினான்கு:**

1. முழுக்கு என்னும் பெருந்தொடக்கு இல்லாமல் இஸ்லாமில் வந்தவன் குளிக்கிறது.
2. பய்யித்தியக்காரன் தெளிவு பெற்ற பின் குளிக்கிறது.
3. சிறு பிள்ளை பாலிகான உடன் குளிக்கிறது.
4. போதையானவன் தெளிவு பெற்ற உடன் குளிக்கிறது.
5. இரத்தம் குத்தி வாங்கினவன் குளிக்கிறது.
6. ஷ.்.பான் மாதம் பராஅத் இரவில் குளிக்கிறது.
7. லைலத்துல் கத்ர் இரவில் குளிக்கிறது.
8. அரபா இரவில் குளிக்கிறது.
9. மக்காவில் புகும் போது குளிக்கிறது.
10. கிரகணத் தொழுகைக்கு குளிக்கிறது.
11. மலைக்காக தொழும் போது குளிக்கிறது.
12. திடுக்கம் உண்டான போது குளிக்கிறது.

13. இருள் கடிசான போது தொழுகைக்காக குளிக்கிறது.
14. கடும் காற்று நீங்குவதற்காக தொழும் போது குளிக்கிறது.

**ஜுனுபாளிகளுக்கு ஐந்து காரியம் ஹராம்:**

1. தொழுகிறது.
2. பள்ளியில் நுழைகிறது.
3. க.ஃ.பாவை தவாப் செய்கிறது.
4. குர்ஆனை ஓதுகிறது.
5. குர்ஆனை தொடுகிறது.

**பாபும் பீ பயானில் ஹைலி வன்னிபாஸ்:**

இது ஹைலும் நிபாஸும் உடைய விபரம் பற்றி பேசும் பாடம். ஹைலாகிறது ஒன்பது வயது முதல் ஐம்பத்தைந்து வயது வரை ஹமல் இல்லாத பெண்ணுடைய கற்பக் குவலரயில் இருந்து வெளியாகும் இரத்தமாக இருக்கும். அதன் நிறம் துய்ய வெள்ளை தவிர கருப்பு, சிவப்பு, மஞ்சள், பச்சை, மண்ணிரம், கலங்கல் ஆக ஆறு நிறமாக இருக்கும். இனி ஹைலுடைய காலத்தில் குறைந்தது இரவு பகல் மூன்று நாள் மிகுந்தது பத்து நாள் ஆகும். ஆனால் இடைவிடாமல் ஓடிக்கொண்டிருப்பது ஷர்த்து அல்ல. பத்து நாளைக்கு அதிகமாக கண்டாலும் மூன்று நாட்களுக்கு குறைந்ததாலும் அது ஹைலு அல்ல. நிபாஸாவது பிள்ளை பிறந்தது முதல் கற்பத்தில் இருந்து வெளியாகும் உதிரமே நிபாஸ் ஆகும். நிபாஸில் குறைந்தது ஒரு நோடி நேரமே ஆகும். அதில் மிகுந்த நாள் நாற்பது நாள் மட்டாக இருக்கும். இனி ஹைலு நிபாஸ் உடைய காரணத்தால் விட்ட நோன்பை கழா செய்ய வேண்டியது கடமை. தொழுகை கழா செய்ய வேண்டியது கடமை அல்ல. இனி ஹைலில் குறைந்தது மூன்று நாளைக்கு உட்பட்டும் மிகுந்தது பத்து நாளைக்கு மேல் பட்டும், நிபாஸில் நாற்பது நாளைக்கு பிற்பட்டும் காணும் இரத்தம் இஸ்திஹாத் என்னும் பெரும்பாடாகிய சோதக வியாதியாகும். இதன் ஹுகும்களை பெரிய கதாபுகளில் பார்த்து கொள்ளுங்கள்.

**ஹைலு நிபாஸ் உடைய பெண் பிள்ளைகளுக்கு எட்டு காரியம் ஹராம்:**

1. தொழுகிறது.
2. பள்ளியில் புகுதுகிறது.
3. க.ஃ.பாவை தவாப் செய்கிறது.
4. குர்ஆனை ஓதுகிறது.
5. குர்ஆனை தொடுகிறது.
6. நோன்பு பிடிப்பது
7. தொப்புளுக்கும் முழங்காலுக்கும் இடையில் உள்ள ஆண்பிள்ளை தொடுகிறது.
8. ஜிமா செய்கிறது.

**பாப் பீ பயானில் மா.ஃ. (தண்ணீருடைய சட்டம்):**

தண்ணீருடைய விபரத்தை பேசும் பாடம். சிறு துடக்கு, பெரும் துடக்கு இரண்டையும் மாவுன் முத்தலக் என்னும் மொத்தமாகிய தண்ணீர் கொண்டு நீக்க வேண்டும். அதாவது வனத்து தண்ணீர், குளத்துத் தண்ணீர், கிணற்றுத் தண்ணீர், ஊற்றுத் தண்ணீர், கடல் தண்ணீர் இவை போல் ஒத்தாகும். முகைய்யத் என்னும் யாதொரு பேர் கொண்டு குறிப்பிடப்பட்ட தண்ணீரினால் நீக்கக் கூடாது. அந்த தண்ணீராகிறது மரத்து நீர், பழத்து நீர், யாதொரு வஸ்துவை முத்தலக்கான நண்ணீர் கலந்தால் தண்ணீரைக்கான அவ்வஸ்து அதிகமாக இருக்கிற தண்ணீர். நஜீஸை நீக்குவது அன்றி ஒலு மற்றும் அது போன்ற வைகளில் பரிமாரப்பட்ட முஸ்த.ஃமலான தண்ணீர் இவை போல் ஒத்ததாக இருக்கும். இனி உப்பு பிளைகிர தண்ணீர் கொண்டும் துடக்கை நீக்கக்கூடாது. பொழுதில் சூடான தண்ணீரை கொண்டும் துடக்கை நீக்கிறது ம.ஃ.ருஹாக இருக்கும்.

**ஹவ்லின் ஹுகும்:** ஹவ்லின் ஹுகும் அதுவாவது த.்.தரா என்னும் பத்திலே பத்தை எத்திய பெரிய ஹவ்லு போல் ஒத்த கட்டுக்கிடை தண்ணீரின் ஹுகுமாவது நான்கு சவ்கமா இருந்தால் சுற்றுற்கு நாற்பது முளமும் வட்டமாக இருந்தால் 36 முளமாக இருந்து அதில் தண்ணீா் அல்லும் போது நிலம் வெளியாகாதுபடி உள்ள ஆலமாக இருந்தால் அதில் குளிக்கிறதும் ஒளூ செய்கிறதும் ஆகும்.

**ஓடுகிற தண்ணீரின் ஹுகும்:** ஓடுகிற தண்ணீரின் ஹுகுமாவது வைக்கோல் துரும்பை அது அடித்து கொண்டு ஓடுகிற தண்ணீராக இருந்தால் அதில் குளிக்கிறதும் ஒளூ செய்கிறதும் ஆகும்.

இவ்விருவகை தண்ணீரிலும் நஜீஸ் விழுந்தால் அதன் குணமாகிய வாடை நிறம் சுவை இம்மூன்றில் ஒன்று மாறினால் அந்த நீரில் காணப்படவிள்ளையானால் அதில் குடிக்கிறதும் குளிக்கிறதும் ஒளூ செய்கிறதும் ஆகும். இனி இந்த குணத்தில் ஒன்று காணப்பட்டாலும் மேல்படி அளவுக்கு குறைந்த தண்ணீரில் நஜீஸ் விழுந்து அதன் குணம் காணப்படவில்லையானால் யாதொன்றும் கூடாது.

**கிணற்றுத் தண்ணீரின் ஹுகும்:** கிணற்றுத் தண்ணீரின் ஹுகுமாவது பத்திலே பத்திற்கு குறைந்த கிணற்றில் ஒரு துளி நஜீஸு விழுந்தாலும் அல்லது தண்ணீரில் ஜீவிக்காத ஓடும்படியான இரத்தம் உள்ள எந்த மிருகமாவது விழுந்து செத்து ஊரினாலும் அல்லது உடைந்தாலும் அல்லது வெளியல் செத்து ஊசியதை அதில் எரிந்தாலும் அல்லது நாய் ஆடு மாடு மனிதன் இவை போல் ஒத்தது விழுந்து மரணமானாலும் அதுகளை எடுத்தேறிந்து பின் நடுத்தரமான பட்டையில் அரை பட்டை நிரம்பாத ஹத்துவரை அந்த தண்ணீா் அடங்களையும் இரைக்க வேண்டும். எலி சிட்டுக்குறுவி பல்லி போல் ஒத்தது விழுந்து இருந்தால் அதை நீக்கிய பின் 20 பட்டை முதல் 30 பட்டை வரையில் இரைக்க வேண்டும். புறா கோலி பூனை இவை போல் ஒத்தது விழுந்து மறித்தால் 40 முதல் 50 வரையிலும் இரைக்க வேண்டும். இனி ஒலுவில்லாதவன் அல்லது முழுக்குள்ளவன் விழுந்து ஹயாத்தாக எழும்பினால் தண்ணீா் அடங்களையும் இரைக்க வேண்டும் அல்லது 40 பட்டை இரைக்க வேண்டும் என்றும் ஹிலாப் உண்டாகி இருக்கிறது. இனி ஒழித்தோடும்படியான இரத்தம் இல்லாத மூட்டை கொசு ஈ வண்டு நட்டுவாக்கிளி போல் ஒத்த வஸ்து, தண்ணீரில் பிறந்து ஜீவிக்கிற மீன் நண்டு தவளை போல் ஒத்த வஸ்து தண்ணீரில் இருந்தால் அந்த தண்ணீா் நஜீஸாகாது. மேல் கூறிய சிறு கிணற்றில் யாதொரு ஹயவான் விழுந்து இரந்த நேரம் அறியப்பட்டாலும் அல்லது அது இன்ன தினத்தில் விழுந்தது என்று இரண்டு மனிதன் சாட்சி சொன்னாலும் செத்த நேரத்தில் இருந்து தண்ணீரை கணத்த நஜீஸ் என்கிறது கொண்டு ஹுகும் செய்யப்படும். இரந்த நேரம் அறியப்படாமலும் ஊராமலும் உடையாமலும் இருந்தால் ஒரு இரவும் பகலும் நஜீஸாகிவிடும். ஆனபோதே அந்த தண்ணீரால் ஒளூ செய்து தொழுத தொழுகையை களா செய்வதும் இந்த தண்ணீா் பட்ட வஸ்துகள் அடங்களையும் கழுகிறதும் வாஜிபாக இருக்கும். இனி சிறு கிணற்றில் தின்ன ஆகுமான பறவைகளில் கோழி தாறாவைத் தவிர புறா சிற்றுக்குறுவி போல் ஒத்ததும் தின்ன ஹராமான பறவைகளும் எச்சம் போட்டாலும் ஊசினுனி போல் சிதரின சிறுநீா் தெரித்தாலும் அல்லது நஜீஸான தூசி பறந்தாலும் ஒட்டகையின் ஆட்டின் புளுக்கையின் ஒன்று இரண்டு விழுந்தாலும் இரைக்கிறது வாஜிப் இல்லை. காட்டில் ஆடு மாடு மிகுதமாக புழக்கமான இடத்தில் உள்ள சுற்றுக்கல் இல்லாத கிணத்தில் விட்டை சானி விழுந்தால் தங்கடத்திற்காக அது பொறுக்கப்படும். தங்கடம் இல்லை ஆனால் நஜீஸாகி விடும்.

**எச்சியின் ஹுகும்:** எச்சியின் ஹுகுமாகிறது மனிதன் வாய் வைத்து குடித்து மிஞ்சிய எச்சியும் தின்ன ஹலாலான உயிா் பிராணிகளின் எச்சியும் துப்புரவாக இருக்கும். நாய் பன்றி உடைய எச்சியும் ஐவாய் மிருகங்களின் எச்சியம் நஜீஸாக இருக்கும். வீட்டுப்பூனை அவிழ்த்து விட்டு மேய்கிற கோழி அவை ஐவாய் பறவைகள் இவைகளின் எச்சியும் பாம்பு எலி போல் வீட்டில் இருக்கிறதின் எச்சியும் அஞ்நபியான ஆண் பெண் இருவரில் ஒருவரை வாய் வைத்து குடித்து மிஞ்சிய எச்சியும் மக்ரூஹாக இருக்கும். இனி அந்தந்த வஸ்துகளின் வோ்வைக்கு ஹுகுமாவது அதன் எச்சியின் ஹுகுமாக இருக்கும். கழுதை கோவேரு கழுதையின் எச்சி மஸ்கூகாக இருப்பதால் அது கொண்டு ஒளூ செய்தாலும் குளித்தாலும் தயமும் செய்ய வேண்டும்.

**முஸ்தஅமலான தண்ணீர்:** முஸ்தஅமலான தண்ணீராகிறது சிறு துடக்கு பெருந்துடக்கு இவைகளை நீக்குவதற்கு அல்லது ஒரு உருப்பின் பர்ளை நிறைவேற்றுவதற்கு அல்லது ஒளுவுல்லவன் மறுபடியும் தவாபை நாடினதற்கு பறிமாற்றம் செய்து உருப்பை விட்டும் பிறிந்த தண்ணீருக்கும் இன்னும் வஜீபனித்த முன்னும் பின்னும் சுன்னத் உடைய நிய்யத் கொண்டு கையை கழுகுவதில் உண்டான தண்ணீருக்கும் முஸ்தஅமலானது என்று சொல்லப்படும். அந்த முஸ்தஅமலான தண்ணீரைக் கொண்டு மறு விடுத்தம் சிறு துடக்கை அல்லது பெருந்துடக்கை நீக்க கூடாது. ஆனால் நஜீஸ் பட்ட வஸ்துகளை அதை கொண்டு கழுவுகிறது ஆகும். குடிக்கிறது மக்ரூஹ். இனி சிறு துடக்கு பெருந்துடக்கு உள்ளவன் த.ஃ.தராவிற்கு குறைந்த தண்ணீரில் வாஜிபாகிய உறுப்புகளில் சிலதை கழுவினாலும் சிறங்கையால் அல்லுகிற அல்லது அதனுல் விழுந்த பாத்திரத்தை எடுக்கிற ஹாஜத்து அன்றியே கையை உள்ளே விட்டாலும் தண்ணீர் முஸ்தஅமலாகி விடும். ஆனால் முன் கையை புகுதவைப்பது போல் நிறப்பமாகிய ஒரு உருப்பை புகுதவிக்கிறது ஷர்த்தாக இருக்கும். ஒரு விரலை அல்லது மிகுந்த விரலை புகுதவிக்கிறது கொண்டு முஸ்தஅமலாகாது.

**பாபு பீ பயானித் தயம்மும்:**

தயமுமுடைய பயானிலே பேசும் பாடம். தயமுமாகிறது தண்ணரை விட்டும் ஒரு மைல் தூரத்தில் இருக்கிறவன் அல்லது தண்ணீரை உபயோகித்தால் வியாதி அதிகப்படும் என்று பயந்தவன் அல்லது வேரே எவ்விதத்திலாவது தண்ணீரை உபயோக்க திராணி பெராதவன் ஒளுவிற்கு அல்லது முழுக்கிற்கு பகரமாக தயமும் செய்ய வேண்டும்.

**தயமுமுடைய ஷர்த்துக்கள் ஆறு:**

1. தொழுகைக்காக தயமும் செய்கிறேன் என்று நிய்யத் செய்கிறது.
2. கொஞ்சமாகிலும் இடைவிடாமல் முகத்தையும் முழங்கை உட்பட இரண்டு கையையும் அடையை வழைந்து தடவுகிறது.
3. மூன்று விரலால் அல்லது மிகுந்த விரலால் தடவுகிறது.
4. பூமியில் மண் மணல் கல் காரை சுண்ணாம்பு சுருமா செம்மன் இவை போல் ஒத்தவைகளில் நெருப்பில் இட்டால் உருகாமலும் சாம்பலாததுமாக இருக்கிறது.
5. பூமி துப்புரவாக இருக்கிறது.
6. தண்ணீர் இல்லாமல் அல்லது தண்ணீரை உபயோகம் செய்ய திராணி பெறாதிருக்கிறது.

**தயமுமுடைய ருக்னு இரண்டு:**

1. முகத்தையும் முழங்கை உட்பட இரண்டு கையையும் தடவுகிறதற்கு பூமியில் அல்லது அதன் இனத்தில் இரு கை கொண்டு இரண்டு தடைவ அடிக்கிறது.
2. முகத்தையும் முழங்கை வரை இரு கையையும் அடைய வழைந்து தடவுகிறது.

**தயம்மமுடைய சுன்னத்துகள் ஏழு:**

1. இரு முன்கையின் உட்புறத்தால் அடிக்கிறது.
2. கையை முன்னால் பின்னால் இழுக்கிறது.
3. கையை உதருகிறது.
4. விரல்களை விரித்துக் கொள்கிறது.
5. ஆஊது பிஸ்மி சொல்கிறது.
6. தற்தீபாக கொண்டுவருகிறது.
7. தொடர்ச்சியாக செய்கிறது.

**தயம்முமை முறிக்கும் கருமம் மூன்று:**

1. ஒலுவை முறிக்கும் கருமங்கள் உண்டாகிறது.
2. தன் ஹாஜத்திற்கு அதிகமான தண்ணீரின் பேரில் திராணி பெறுகிறது.
3. தயமும் செய்ய நேரிட்ட தங்கடம் நீங்குகிறது.

**பாபு பீ பயானின் நஜாஸா:**

நஜீஸ்களுடைய பயானை பேசும் பாடம். ஒலுவில்லாமல் இருப்பதும் முழுக்காளியாயிருப்பதும் ஹுக்மிய்யான நஜீஸ் என்றும், மற்ற நஜீஸ்களை ஹகீகிய்யான நஜீஸ் என்றும் சொல்லப்படும். ஹுக்மிய்யான நஜீஸ்களின் பாடம் முந்தி விட்டது. ஹகீகிய்யான நஜீஸ்களின் ஹுக்ம்களாவது.

**ஹகீகிய்யான நஜீஸ்கள் இரண்டு வகைப்படும்.** ஒள்றாவது முவல்லதா எனும் கனத்த நஜீஸ். அதாவது மலம், ஜலம், இந்திரியம், மதி, வதி, இரத்தம், சீழ், சலம், வாய் நிறம்பிய சத்தி, பன்றி, சாராயம், கள்ளு, செத்தின் இறைச்சி, அதன் பச்சை தோல், ஆகாயத்தில் பறக்கும் போது எச்சம் போடாத கோழி தாறாவைப் போல் கோத்தின் எச்சம், விட்டை, சானி, புளுக்கை, தின்னப்படாத ஜவாய் மிருகங்களின் மலம், ஜலம், இவைகளின் வாய் நீர், பூனையின் மலம் ஆகிய இவைகளாக இருக்கும். அந்த நஜீஸில் திருகத்துடைய கத்ரை பொருக்கப்படும். அதாவது இலக்கலாணத்தில் நின்றும் உள்ளங்கை பல்லத்தின் அகழம் கண்டிப்பானதில் நின்றும் ஒரு களஞ்சி இடை இவை சறீரத்திலும் துணி பிடவை முதலியவைகளிலும் பட்டால் பொருக்கப்படும். ஆனால் அந்த கத்ரை வைத்துக்கொண்டு தொழுகிறது மக்ரூஹ் தஹ்ரீமாக இருக்கும். மறதி அல்லது தங்கடம் கொண்டு ஒழிய ஆனால் அந்த கத்ரை கழுகிறது வாஜிபாகவும் அதற்கு குறைந்த கத்ரை கழுகிறது சுன்னத்தாகவும் இருக்கும்.

இரண்டாவது முஹப்பபா எனும் இலேசான நஜீஸாகிறது தின்னப்படும் ஹயவானின் மூத்திரமும், குதிரை மூத்திரமும், தின்னப்படாத பறவைகளுடைய எச்சமுமாக இருக்கும். இந்த நஜீஸில் களுகப்பட்ட உருப்பில் நாலில் ஒரு பங்கு குறைந்ததையும் தொழுகையில் பர்ளான உருப்பை மறைக்கும் படியான துணி புடவை போல் ஒத்ததில் நான்கில் ஒரு பங்கிற்கு குறைந்ததும், ஊசிமுனை போல் தெரித்த மூத்திரம், கழுதை எச்சியும் பொருக்கப்படும். மற்ற பிரிவுகளை பெரிய கிதாபுகளில் பார்க்கவும்.

**பாபு பீ அவ்காத்தஸ் ஸலாத்:**

தொழுகையுடைய வக்துகளிலே பேசும் பாடம்.

1. பஜ்ரு தொழுகையின் வத்தாகிறது கிழக்கே மெய் வெள்ளை தெரிந்தது முதல் பொழுது உதயமாகிறதற்கு சற்று முன் வரையிலாக இருக்கும். ஆனால் ஆண் பிள்ளைகள் பஜ்ரு தொழுகையை நிலம் தெளிந்து தொழுகிறது முஸ்தஹப்பு. பெண் பிள்ளைகள் இருள் இருக்கும் போதே தொழுகிறது ஏற்றமாக இருக்கும். பஜ்ருடைய பர்ளுக்கு முன் இரண்டு ரக்அத் சுன்னத்.
2. லுஹருடைய வக்தாகிறது: வானம் மத்தியில் சூரியன் சற்று மேர்கே திரும்பியது முதல் ஒரு வஸ்துவுடைய அச்சு சாய்வு நிழலலை தவிர அவ்வஸ்துவின் இரு பங்கு நிழல் கிழக்கே சாய்கிற வரயிலுமாக இருக்கும். வெயில் காலத்தில் லுஹருடைய இமாம் ஜமாஅத் தவராவிட்டால் கொஞ்சம் பிற்படுத்துகிறது முஸ்தஹப்பாக இருக்கும். அதாவது ஒரு பங்கு சாய்கையை எற்று முன் தொழ வேண்டும். திட்டமாக இமாம் ஜமாஅத் தப்புகிறதாக இருந்தால் பிற்படுத்துகிறது ஹராம். ஜூம்ஆ தொழுகையை பிற்படுத்துகிறது முஸ்தஹப்பு இல்லை. மாறி காலத்திலும் பனி காலத்திலும் மேகம் இல்லாத நேரத்தில் லுஹரை முற்படுத்துவது முஸ்தஹப்பு. மேகம் இருந்தால் பிற்படுத்துகிறது முஸ்தஹப்பாக இருக்கும். அந்த வக்தில் பர்ளுக்கு முன் நான்கு ரக்அத்தும் பின் இரண்டு ரக்அத்தும் சுன்னத்து.
3. அஸ்ருடைய வக்தாகிறது: அஸ்ரின் வக்தாகிறது உச்சி நிலலை தீர இரு சாய்கையானது தொடுத்து சூரியன் அடைகிறவரையிலாக இருக்கும். ஆனால் காலமலங்களிலும் மஞ்ச வெயில் இரங்காமல் இருக்கிற வரையிலும் பிற்படுத்துகிறது மேகம் இல்லாதிருக்கும் நேரத்தில் முஸ்தஹப்பு. மேகம் இருந்தால் அவ்வல் வக்திலே தொழுகிறது முஸ்தஹப்பாக இருக்கும்.
4. ம.்.ரிபுடைய வக்தாகிறது: பொழுது அடைந்தது முதல் செம் மேகம் மறையும் வரையிலாக இருக்கும். எக்காலமும் ம.்.ரிபை முற்படுத்துவதே முஸ்தஹப்பாக இருக்கும். அதில் பர்ளுக்குப் பின் இரண்டு ரக்அத் சுன்னத். இனி ஸலவாத்துல் அபவைனி என்னும் தொழுகை ஆறு ரக்அத் நபில் தொழுகிறது முஸ்தஹப்பு.

5. இஷாவுடைய வக்தாகிறது: செம் மேகம் மறைந்தது முதல் கிழக்கு வெளுக்கும் வரையிலாக இருக்கும். மாரி காலத்தில் இரவில் மூன்றில் ஒரு பங்கு வரையில் இஷாவை பிற்படுத்துகிறதும் கொடை காலத்தில் மேகத்துடைய நாளையிலும் வக்து வந்தது திட்டமான உடன் அவ்வல் வக்திலே முற்படுத்துவதும் முஸ்தஹப்பு. இதில் பர்ளுக்கு பின் இரண்டு ரக்அத் சுன்னத். இஷாவிற்குப் பின் தொழுகிறது வித்ரை மெய் வெள்ளை தெரியும் முன் நிச்சயமாக முழிப்பதை அறிந்தவன் இரவின் கடைசி வரை பிற்படுத்துகிறது முஸ்தஹப்பு. அப்படி இல்லையானால் நித்திரை செய்யும் முன் தொழ வேண்டும். இஷாவுக்குப் பின் நித்திரை செய்கிறதும் இஷாவிற்கு பின்னும் பஜ்ரு சாதிக்குக்கும் மேற்படி தொழுகைக்கு இடையிலும் பேச்சு பேசுகிறதும் மக்ரூஹாக இருக்கும்.

**ஹராமான வக்துகள்:** ஹராமாக வக்துகளாவது சூரியன் உதியமாகி ஒரு வல்லைய பிறமானமாகிர நேரம் வறையிலும். சூரியன் உச்சியில் இருக்கும் போது. சூரியன் மஞ்சனித்து அடைகிற வரையிலுமாக இருக்கும். இம்மூன்று வக்திலும் களா தொழுகை, நபில் தொழுகை, ஜனாஸா தொழுகை, திலாவத்தின் ஸஜ்தா இரு போல் ஒத்த யாதொன்றும் செய்யலாகாது. செய்தாலும் கூடாது. ஆனால் அன்றைய அஸரு தொழுகை பிந்திவிட்டால் சூரியன் மஞ்சனித்த போதிலும் அவ்வக்தில் பர்ளை அதா செய்வதும் இம்மூன்று வக்தில் வந்து ஹாலிரான ஜனாஸாவை தொழவைக்கிறதும் அதுகளில் ஓதின ஸஜதா திலாவத்து செய்கிறதும் ஆகும்.

**மக்ரூஹான வக்துகள்:** பஜ்ரு தொழுத பின்னும் அஸரு தொழுத பின்னும், இமாம் குத்பா ஓத மிம்பரில் ஏறிய முதல் தொழுது முடிகிற வரையிலும், ம.்.ரிபுடைய பர்ளுக்கு முன்னுமாக இருக்கும். இவ்வக்துகளில் நபில் தொழுகிறதும், நேர்ச்சையான தொழுகை தொழுகிறதும், பர்ளான தொழுகைக்கு இகாமத்து சொன்ன பின் சுன்னத் தொழுகிறதும், இஷாவை பாதி இரவான பின் தொழுகிறதும், இரண்டு பெருநாள் தொழுகைக்கு முன் சுன்னத் தொழுகிறதும், பர்ளுக்கு வக்து நெருக்கமாக இருக்கும் போது சுன்னத் தொழுகிறதும், வஜீபனம் ஹாலிராக இருக்க தின்னாமல் கல்பை பராக்காக்கிக் கொண்டு தொழுகிறதும் மக்ரூஹாக இருக்கும்.

**பாபு பீ பசீலத்திஸ் ஸலாத்:**

தொழுகைவுடைய வருஷையில் பேசும் பாடம். இது

قَالَ اللهُ تَعَالٰي اِنَّ الصَّلٰوةَ كَانَتْ عَلَي الْمُؤْمِنِيْنَ كِتَابًا مَوْقُوْتًا

ஏ.்.னி தொழுகை இஸ்லாமாகிய ஜனங்கள் பேரில் ஐந்து வக்தையும் தொழும்படி வேத விதியாக்கினேன் என்று அல்லாஹ் தஆலா குர்ஆனில் திருவுளம் பற்றினான்.

**ஹதீது**: கியாமத்து நாளில் அல்லாஹ் தஆலா ஹல்குகளை எழுப்பும் போது சில கூட்டத்தார்கள் நட்சத்திரங்களை போல் முகத்தை உடையவர்களாக எழுந்திருப்பார்கள். அப்போது மலக்குகள் நீங்கள் என்ன அமல் செய்தீர்கள் உங்களுக்கு இவ்வளவு வெகுமதி கிடைத்தது? என்று கேட்க நாங்கள் பூமியில் இருக்கும் போது பாங்கு சத்தத்தை கேட்ட உடன் என்ன வேலை இருந்த போதிலும் அவைகளை எல்லாம் விட்டுவிட்டு நாங்கள் ஒலு செய்து தொழுதோம் என்று சொல்வார்கள்.

இன்னும் சில கூட்டத்தார்கள் சந்திரனைப் போல் முகமாக எழுந்திருப்பார்கள். அப்போது மலக்குகள் நீங்கள் என்ன அமல் செய்தீர்கள்? என்று கேட்பார்கள். நாங்கள் பாங்கு சப்தம் கேட்கும் முன்பாக ஒலு செய்து தொழுதவற்கு தயாராக இருந்தோம் என்று சொல்வார்கள். இன்னும் சில கூட்டத்தார்கள் சூரியனைப் போல் முகமாக எழுந்திருப்பார்கள். அப்போது மலக்குகள் நீங்கள் என்ன அமல் செய்தீர்கள்? என்று கேட்பார்கள். நாங்கள் பாங்கு சப்தத்தை பள்ளிக்குள் இருக்கும் போது கேட்டோம் என்று சொல்வர்கள் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்து அருளினார்கள்.

**பாபு பீ உகூபத்தி தாரிக்கிஸ் ஸலாத்:**

தொழுகையை விட்டவனுடைய வேதனையைப் பற்றி பேசும் பாடம்.

فَوَيْلٌ لِلْمُصَلِّيْنَ الَّذِيْنَهُمْ عَنْ صَلَاتِهِمْ سَاهُوْنْ

வைல் எனும் ஓடையாகிறது தொழுகையை விட்டும் மறப்பார்களே அப்படிக்கொத்த தொழுகைக்காரருக்காக இருக்கும். முராதாவது, வக்தை விட்டும் பிற்படுத்துவார்களே அவர்களுக்காக இருக்கும். அறிந்து கொள்! வைல் எனும் ஓடையாகிறது ஜஹன்னம் எனும் நரகத்தில் ஒரு ஓடை. அந்த ஓடையில் துன்யாவில் உள்ள மலைகள் எல்லாம் கொண்டு போய் போடப்படுமானால் மலைகள் தண்ணீர் போல் உருகிப் போகும்.

**ஹதீது:** உமருப்னுல் ஹத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத் செய்யப்பட்டது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளம் பற்றினார்கள் யாராகிலும் ஒரு மனிதன் பாங்கு சப்தத்தை கேட்ட உடன் தொழுகைக்கு வரவில்லையானால் அல்லாஹ் தஆலா அவனை கை சேதப்பட்ட கூட்டத்தாருடன் எழுப்புவான். அவனை நரகத்தில் தள்ளி நரகவாதிகளுடைய ஊன் வெண்ணீரை அவன் காதில் ஊற்றி அல்லாஹ் தஆலாவுடைய தொழுகைக்காக பாங்கு சொன்னதை கேட்ட உடன் வராமல் இருந்தாயே அதற்காக இப்போகொத்த துன்பமான அதாபை பெற்றுக்கொள் என்று மலக்குகள் சொல்லி அதாபு செய்வார்கள் என்று திருவுளமானார்கள்.
இன்னும் ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்: தொழுகையாகிறது தீனுக்கு தூணாக இருக்கும். யாராகிலும் ஒருவன் தொழுகையை நிலைநிறுத்தினால் தீனை நிலைநிறுத்தினான். தொழுகையை விட்டால் தீனை இடித்து விட்டான். ஒரு அடியான் தொழுகையை விடுகிறதில்லை அல்லாஹ் தஆலா அவனுடைய முகத்தில் இவன் அல்லாஹ்வுடைய ரஹ்மத்தை விட்டும் புறப்பட்டவன் என்று எழுதியே ஒழிய. ஆகையால் அறிந்து கொள்ளுங்கள். யாராகிலும் ஒருவன் தொழுகையை விட்டால் நான் அவனை விட்டும் நீங்கினவனாக இருப்பேன் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள். ஆகையால் என்னுடைய உடன் பிறந்தான்மார்களே இந்த ஹதீதை உங்களுடைய பயங்கரம் எனும் கண் கொண்டு பார்த்து உறுதிப்பெற்று தொழுகை அளவில் விரைந்து கொள்ளுங்கள் அல்லாஹ் தஆலா உங்களுக்கு இருபதியிலும் கிருபை ரஹ்மத் செய்வானாகவும். ஆமீன்.

### பாபு பீ புருத்திஸ் ஸலாத்:

தொழுகையையில் உள்ள பர்ளுகளைப்பற்றி பேசும் பாடம். தொழுகையில் ஷர்த்து என்னும் வெளிபர்ளு ஏழையும், ருக்னு என்னும் உள்பர்ளு ஆறையும் பற்றி பேசப்படும். இந்த பர்ளுகளில் ஒன்றை தப்பி விட்டாலும் தொழுகை பசாதாகிவிடும், அதாவது கூடாது.

### தொழுகையின் வெளிபர்ளு ஏழு:

1. தொழுகையின் வக்தை அறிகிறது.
2. சிறுந்துடக்கு பெருந்துடக்கை விட்டும் துப்புரவாக இருக்கிறது.
3. உடுமானம் முதலியவைகள் இரு வகை நஜீஸை விட்டும் துப்புரவாக இருக்கிறது.
4. நஜீஸுகளை விட்டும் தொழும் தளம் துப்புரவாக இருக்கிறது.
5. அவ்ரத்தை மறைக்கிறது. ஆதாவது, ஆண் பிள்ளைகளுக்கு தொப்புளின்கீழ் அருகு முதல் முட்டுகளுக்கு கீழ் வரையிலும். அடிமை பெண் பிள்ளைக்கு அதுடன் வயிரும் முதுகும் நாட்டாண்மகளுக்கு முகமும் இரு முன் கையும் இரு பாதமும் தவிர மற்ற சரீரம் அடங்களுமாக இருக்கும்.
6. கிப்லாவை முன்னோக்குகிறது. ஏ.்.னி க.்.பத்துல்லாஹ்வை அல்லது அதன் திசையை முன்னோக்குகிறது.
7. கலப்பற்றுதளாய் அல்லாஹ் தஆலாவுக்கு தொழகையை நாடுகிறேன் என்று நிய்யத் செய்கிறது.

### தொழுகையின் உள்பர்ளு ஆறு:

1. தக்பீர் தஹ்ரீமா அதாவது நிய்யத்துடன் சேர்த்து சொல்லும் முதல் தக்பீர்.
2. நிலை அதாவது நிற்க திராணி பெற்றவன் பர்ளிளும் வாஜிபிலும் பஜ்ருடைய சுன்னத்திலும் நிலை நிற்கிறது.

3. கிராஅத் அதாவது பா்ளுடைய இரண்டு ரக்அத்திலும் வாஜிபு சுன்னத் முஸ்தஹப்பு முதலிய தொழுகைகளின் எல்லா ரக்அத்களிலும் கிராஅத் ஓதுவது.
4. ருகூஹ் செய்கிறது. அதாவாது இரண்டு கையையும் நீட்டினால் முட்டுக்கள் வரையில் படும் என்கிற வரை குணிகிறது.
5. இரண்டு சுஜுது செய்கிறது. அதாவது பூமியின் பேரில் அல்லது பூமியை சார்ந்திருக்கிற கண்டிப்பான வஸ்துவின் பேரில் நெற்றியை தரிபட வைக்கிறது.
6. பின் இருப்பு. அதாவது தொழுகையின் கடைசியில் அத்தஹிய்யாத்தை அப்துஹு வரஸுலுஹு ஓதுகிற வரை தாமதித்து இருக்கிறது.

**தொழுகையின் வாஜிபுகள் இருபத்தி ஒன்று:**

1. பாத்திஹா ஓதுகிறது.
2. ஒரு சூரத்தை அல்லது மூன்று ஆயத்தை அல்லது ஒரு பெரிய ஆயத்தை சேர்க்கிறது.
3. பாத்திஹாவை சூரத்திற்கு முன் ஓதுகிறது.
4. முந்தின இரண்டு ரக்அத்திலே குர்ஆனை கிராஅத்தை குறிப்பாக்குகிறது.
5. சுஜுதை போல் ஒரு ரக்அத்தில் மடக்கி வரப்பட்ட செயலில் தற்தீபை பேணுகிறது.
6. ருகூவைக் கான கிராஅத்தை முற்படுத்துகிறது.
7. ருகூ, சுஜுது, இ.ஃதிதால், இரண்டு ஸஜதாவிற்கு உள்ள இருப்பு ஆகிய இவைகளில் தரிபடுகிறது.
8. முந்தின இருப்பு.
9. இரண்டு இருப்பிலும் அத்தஹிய்யாத் ஓதுகிறது.
10. அந்தந்த பா்ளுகளையும் வாஜிபுகளையும் அதுஅதின் தளத்தில் கொண்டு வருகிறது.
11. முந்தின இருப்பில் அப்துஹு வரஸுலுஹு வுக்குப் பின்னால் ஸலவாத்தை ஓதாமல் இருப்பது.
12. இமாமுடைய பா்ளான செயலில் முக்ததி தொடருவது.
13. இமாடுக்குப் பின் முக்ததி கிராஅத் ஓதாமல் இருக்கிறது.
14. இரைந்து ஓதும் தளத்தில் இரைந்து ஓதுகிறது.
15. அமா்ந்து ஓதும் தொழுகையில் அமா்ந்து ஓதுகிறது.
16. வித்ரின் மூன்றாவது ரக்அத்தின் ரூக்விற்கு முன் குனூத் ஓதுகிறது.
17. இரண்டு பெருநாள் தொழுகையிலும் ஒவ்வொரு ரக்அத்திற்கும் அதிகமாக மூம்மூன்று தக்பீா் சொல்கிறது.
18. அத்தொழகையுடைய இரண்டாம் ரக்அத்தின் ருக்விற்கு பொவிதற்காக தக்பீா் சொல்கிறது.
19. அந்தந்த பா்ளை ஒத்ததின் தானத்தில் கொண்டு வருகிறது.
20. வாஜிபுகளை அதுஅதின் தளத்தில் கொண்டு வருகிறது.
21. தொழுகையின் கடைசியில் இரண்டு சலாம் சொல்கிறது.

**தொழுகையின் சுன்னத்துகள்:** தொழுகையின் சுன்னத்துகளாவது தக்பீா் தஹ்ரீமாவிற்காகவும் குனூத்திற்காகவும் பெருநாளின் தக்பீருக்காகவும் இரு கையை உயா்த்துவதும் விரல்களை பொருத்துவதும் தக்பீா் கட்டும் போது தலையை தாழ்த்தாமல் இருக்கிறதும் தக்பீா்களை இமாம் இரைந்து சொல்வதும் தனா அஊது பிஸ்மி ஆமீன் இதுகளை அமா்ந்து ஓதுவதுமாக இருக்கும். இன்னும் வலது கைளை இடது கையின் பேரில் வைத்து தொழுகையை தொப்புளுக்கு கீழ் வைப்பதும் ஹலரில் வக்து விஸ்தீரமாக இருக்கும் போது பஜ்ரிலும் லுஹரிலும் திவாலுல் முபஸ்ஸல் ஏ.ஃனி சூரத்துல் ஹுஜ்ராத்து முதல் புரூஜ் வரையில் உள்ள சூரத்தில் நின்றும் அஸரிலும் இஷாவிலும் வைசதுல் முபஸ்ஸல் ஏ.ஃனி புரூஜ் முதல் லம்யகுன் வரையில் உள்ள சூரத்தில் நின்றும் ம.ஃரிபில் கிசாவுல் முபஸ்ஸல் ஏ.ஃனி லம்யகுன் முதல் ஒடுக்கம் வரையில் உள்ள சூரத்தில் நின்றும் ஓதுகிறதும் ரூக்வுடைய தக்பீரும் அதில்

سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمْ

என்று தஸ்பீஹை மூன்று விடுத்தம் சொல்வதும் இரண்டு முட்டையும் இரண்டு கையினால் பிடிப்பதும் விரல்களை விரித்துக் கொள்வதும் சுன்னத். தனித்து தொழுகிறவனும் இமாமை ரூக்ஜை விட்டும் உயரும் போது

سَمِعَ اللهُ لِمَنْ حَمِدَهْ

என்று ஓதுவதும் ம.ஃமூம் தனித்து தொழுகிறவனும் உயா்ந்த பின்

اللّٰهُمَّ رَبَّنَا لَكَ الْحَمْدُ

என்று சொல்வதும் ஸுஜூதுடைய தக்பீரும் இதில்

سُبْحَانَ رَبِّيَ الْاَعْلٰى

என்று மூன்று தரம் தஸ்பீஹ் செய்வதும் அதை விட்டு எழும்பும் போது தக்பீர் சொல்வதும் ருக்யில் சூஜூதில் ஆண் பிள்ளை வயிற்றை தொடையை விட்டும் முழங்கையை புமியை விட்டும் நெருக்கமில்லாத தளத்தில் கொடுங்கையாய் வழாவையை விட்டும் அடக்கிக் கொள்வதும் அத்தஹிய்யாத்தில் வலது காலை நட்டி இடது காலை விரித்து அதின் பேரில் இருப்பதும் பின் இருப்பில் அத்தஹிய்யாத்திற்குப் பின் ஸலவாத்தும் துஆவும் ஓதுவதும் ஸலாமுக்காய் முகத்தை வலம் இடம் திருப்புவதுமாக இருக்கும். இந்த சுன்னத்துகளில் சிலதில் பெண் பிள்ளைகள் விதா்ப்பமாவாா்கள். அதாவது அவா்கள் முந்தின தக்பீா் கட்டும் போது கைகளை காதுக்கு சமீபமாக உயா்த்தாமல் புயத்திற்கு நேரே உயா்த்துவதும் நேஞ்சின் பேரில் கையை வைப்பதும் ருக்யில் விரல்களை விரிக்காமல் முட்டை இரண்டு கையால் பொதிந்து கொள்வதும் ருக்யில் சூஜூதில் கொடுங்கையை விழாவை விட்டும் வயிற்றை தொடையோடு சோ்த்துக் கொள்வதும் இரு முழங்கையையும் பூமியோடு பினய வைத்துக் கொள்வதும் அத்தஹிய்யாத்தில் இரண்டு காலும் வலது பக்கம் விட்டு சவன்த்தின் பேரில் இருப்பதும் சுன்னத்.

**தொழுகையின் முஸ்தஹப்புகள்:** தொழுகையின் முஸ்தஹப்புகள் ஆகிறது: நிலையில் நிற்கும் போது சூஜூதின் தலத்தளவிலும் ருகூவில் இருக்கும் போது இரு பாதத்தின் முதுகளவிலும் சூஜூதில் இருக்கும் போது மூக்கின் நுனி அளவிலும் இருப்பில் இருக்கும் போது முடி அளவிலும் முந்தின ஸலாம் சொல்லும் போது வலது தோல் புஜத்தின் அளவிலும் இரண்டாம் ஸலாமில் இடது தோல் புஜத்தின் அளவிலும் பாா்க்கிறதும், கொட்டாவியிடும் போது வாயை திறக்காமல் இரண்டு உதட்டையும் பள்ளைக் கொண்டு பிடித்துக் கொள்வதும் அல்லது தடுத்துக் கொள்கிறதும் ஏலாவிட்டால் இடது கை முதுகினால் அல்லது சட்டைக்கையினால் வாயை மூடுவதும், தக்பீா் தஹ்ரீமாவிற்கு கையை உயா்த்தும் போது முன் கையை தட்டையை விட்டும் நீக்கிக் கொள்வதும் பெண் பிள்ளைகள் சட்டையை கையை விட்டும் இரண்டு முன் கையையும் நீக்காமல் இருப்பது முஸ்தஹப்பு. இருமலை இயன்ற மட்டும் தடுக்கிறதும், ஹையாலல் பலாஹ் என்று சொல்லுகிற நேரத்தில் இமாம் ஜமாஅத்துகள் எழும்புகிறதும், கத்காமதிஸ்ஸலாஹ் என்று சொல்லும் போது இமாம் தொழுகையில் துடங்குவதும், கடைக்கண்ணால் வலம் இடம் பாராமல் இருக்கிறதும், மூன்று ஆயத்திற்கு அதிகமாக ஓதுகிறதும், ருக்ஹில் முத்கையும் தலையையும் சரியாக வைப்பதும் சூஜூது செய்யும் போது முதல் இரு முலங்கால் பின்பு இரு கை பின்பு மூக்கு பின்பு நெற்றி இப்படியாக வைப்பதும், நிலையில் வரும் போது அதற்கு மாற்றமாக முதலில் நெற்றி பின்பு மூக்பு பின்பு இரு கை பின்பு இரு முலங்கால் இவ்விதம் எடுப்பதும் முஸ்தஹப்பு.

**தொழுகையை முறிக்கும் கருமங்கள்:** தொழுகையை முறிக்கும் கருமங்களாகிறது தொழுகையில் இருக்கும் போது யாதொன்றும் தின்டாலும் குடித்தாலும் பேசினாலும் தொழுகையை முறித்து விடும். அது கொங்சமானாலும் அல்லது மறதியாக வானாலும் சரியே. ஆனால் பள்ளுக்கு இடையில் ஒரு கடலை மத்துக்கு ஏதாவது இருந்து அதை முழுங்கிவிட்டால் முறிக்காது. இன்னும் தங்கடம் அன்றி கனைக்கிறதில் அல்லது தும்முகிறதில் அல்லது இருமல் ஏப்பம் கொட்டாவி இவைகளில் இரண்டு ஹா்பு உண்டாகி விட்டால் முறிந்து போகும். தங்கடத்தினால் உண்டானால் முறியாது. இன்னும் தொழுகைளை இனக்கமாக்குவதன்றி அதன் இனம் இல்லாத மிகுந்த செயலினால் தொழுகை முறியும். மிகுந்த செயல் என்பது தூரத்தில் நின்று ஒரு மனிதன் பாா்த்தால் தொழுகையில் இவன் இல்லை என்பதில் சக்காக மாட்டானே அப்படிபட்ட செயலாக இருக்கும். ஒரு சொல்படி ஒரு பா்ளில் தொடா்ச்சியாக மூன்று செயல் செய்கிறதாக இருக்கும். இன்னும் மற்றொருவன் தும்மலுக்கு ரஹிமக்கல்லாஹ் என்று இவன் ஜவாப் சொன்னாலும் தன்னுடைய இமாமை தவிர மற்றொருவன் பிசகாய் ஓதும் போது சொல்லிக்கொடுத்தாலும் குா்ஆனை பாா்த்து ஓதினாலும் தங்கடம் அன்றி நெஞ்சு கொண்டு கிப்லாவை மாறினாலும் முக்ததி இல்லாதவன் சொல்லிக்கொடுத்ததை எடுத்தோதினாலும் துன்யாவின் தீங்கை நினைத்து சப்தம் இட்டு அழுதாலும் தக்பீரை இரைந்து சொல் என்று ஒரு சொன்னதை கேட்டு இரைந்து சொன்னாலும் தொழுகை பசாதாகிவிடும் அதாவது அளிந்துவிடும்.

**தொழுகையில் மக்ரூஹுகள் பதினாறு:** தொழுகையின் மக்ரூஹ் தஹ்ரீம் பதினாறாக இருக்கும்.

1. தன் பிடவையை இனையாமல் தோல் மேல் போட்டு சோர விடுகிறது.
2. சுஜூதிற்கு போகும் போது முன்னால் அல்லது பின்னால் புடவையை உயர்த்துகிறது.
3. மலம் ஜலம் காற்று இவைகளை அடக்கிக் கொண்டு தொழுகிறது.
4. விரல்களை நெட்டி வைக்கிறது.
5. இடுப்பில் கை வைத்து நிற்பது.
6. முகத்தை வலம் இடம் யாதொரு உதிர்யின்றி திருப்புகிறது.
7. ஆண் பிள்ளை முலங்கை சூஜூதில் படுக்க வைத்துக் கொள்கிறது.
8. மனிதரின் முகத்திற்கென்றே தொழுகிறது.
9. நாய் இருப்பு இருக்கிறது.
10. கொட்டாவி வந்தால் அதை முழுங்காமல் அல்லது வாயை மூடாமல் மணமுரன்டாக இருக்கிறது.
11. வாயையும் மூக்கையும் வீணுக்கு மூடிக் கொளிகிறது.
12. சரீரத்தையும் பிடவையையும் சங்கடம் அன்றி உளுப்பி விளையாடுகிறது.
13. ஒரு முலமான மேட்டின் உயரத்தில் இமாமும் பல்லத்தில் ஜமாஅத்தும் யாதொரு தங்கடம் அன்றி நிற்கிறது.
14. உயிர் பிராணியின் ரூபமுள்ள பிடவையை அனைகிறது.
15. திர்ஹும்மிடை கணத்த நஜீஸ் பட்டிருப்பதை தெரிந்து கலுவாமல் தொழுகிறது.
16. முந்தின சப்பில் இடமிருக்க பிந்தின சப்பில் நிற்கிறது.

ஆனபோதே இந்த மக்ரூஹ் தஹ்ரீம்களில் ஒன்றொன்றாய் இருப்பதுடன் தொழுகையை நிறைவேற்றினால் தொழுகையை மீழவைப்பது வாஜிபு.

அந்த தொழுகையின் ஒடுக்கத்தில் இரண்டு சுஜூது செய்து ஸலாம் வாங்கவும். சுஜூது இரண்டும் சுன்னத்தாக இருக்கும். அந்த அப்ஆலு சுன்னத்தில்லாமல் வேறே எந்த சுன்னத்தாவது விட்டதற்கு ஸஜ்தா ஸஹ்வு கிடையாது. அதை அறிந்து மறந்து ஸஜ்தா ஸஹ்வு செய்தால் தொழுகை பாதிலாகி விடும். ஸஜ்தா ஸஹ்வை மறந்து ஸலாம் வாங்கினவன் கிப்லாவை நெஞ்சு கொண்டு மாறாமல் இருந்தால் தொழுகையளவில் மீண்டு ஸஜ்தா ஸஹ்வு செய்து ஸலாம் வாங்கலாம்.

**ஸஜ்தா ஸஹ்வின் பயான்:** ஸஜ்தா ஸஹ்வாகிறது எந்த தொழுகையிலாவது தொழும் போது அதன் வாஜிபுகளில் ஒரு வாஜிபை இமாமானவன் அல்லது தனித்து தொழுகிறவன் நியாபகத்தோடு விட்டாலும் ஸஹ்வு நேரிட்டு ஸஜ்தா ஸஹ்வு செய்யாது விட்டாலும் மக்ரூஹ் தஹ்ரீமுடன் தொழுகை நிறைவேற்றப்பட்டாலும் தொழுகையை திருப்பி தொழுகிறது வாஜிபு. இனி வாஜிபுகளை மறதியாக விட்டாலும் பர்ளு வாஜிபுகளை மடக்கி செய்தாலும் அதுகளை பிற்படுத்தினாலும் ஸஜ்தா ஸஹ்வு செய்வது வாஜிபாகும். ஸஜ்தா ஸஹ்வு செய்யும் விதமாவது பிந்தின இருப்பில் அத்தஹிய்யாத் ஓதின பின் வலது புறம் ஸலாம் சொல்லி ஸஹ்வுடைய இரண்டு ஸஜ்தா செய்து அத்தஹிய்யாத் ஸலவாத் துஆ ஓதிய பின் இரண்டு புறம் ஸலாம் சொல்லவும். இமாமுடன் தொழுகிறவன் தன் பேரில் ஸஹ்வு நேரிடாது இருந்தாலும் இமாம் ஸஹ்வு ஸஜ்தா செய்வதற்காக தானும் கூட செய்வது வாஜிபு.

**பாபு பீ கைபிய்யாத்திஸ் ஸலாத்:**

தொழுகை உடைய ஒழுங்கின் பாடம் அதாவது ஒருவன் தொழுகையில் புகுத நாடினால் முன் சொன்னது போல் சிறு துடக்கு பெருந்துடக்கை விட்டும் துப்புரவாகி இடத்தையும் சரீரத்தையும் துணி பிடவையையும் நஜீஸ்களை விட்டும் துப்புரவு செய்த பின் உறுப்புகளை ஹராமான பார்வை, கேள்வி, கோள், புறம், பொய் இதுபோல் ஒத்த பாவங்களை விட்டும் துப்புரவாக்கி இருப்பதுடன் கல்பை வஞ்சகம், மோசம், பெருமை, சூது போல் ஒத்தவைகளை விட்டும் துப்புரவாக்கி தன்னுடைய பாவங்களை விட்டும் தவ்பா செய்து துன்யாவின் பராக்களவில் நாட ஓட்டாமல் இயன்ற மட்டிலும் கல்பை தடுத்து இபாதத்தை அல்லாஹ் தஆலாவுக்காக கலப்பருதலாக்கி நிய்யத் செய்து கிப்லாவுக்கு நேராக நின்று ஆண் பிள்ளையானவன் இரு முன் கையையும் சட்டை கையை விட்டு புறப்படுத்தி இரண்டு இரு பெருவிரலை கொண்டும் இரு

காதின் சோனையை தொட்டவனாக இரண்டு கையையும் உயர்த்தி இரு முன் கையின் உள்புறத்ததை கிப்லாவிற்கு நேராக்கவும். பெண் பிள்ளையானவள் தன் விரல்களின் தலைகளை இரண்டு தோல் புஜத்திற்கு நேராக்கவும் புறம் கொண்டு உயர்த்துவாள். பின்பு அந்த நிய்யத்துடன் அல்லாஹுு அக்பர் என்ற தக்பீரை சொல்லி நிலை இருப்பு அதற்கு இடையில் நாளு விரல் மட்டும் இடைபோட்டு நின்று தக்பீர் சொன்னவுடன் தனா ஓதினவனாக இடது கை மணிக்கட்டை வலது கை சின்னி விரலைக் கொண்டும் பெரு விரலைக் கொண்டும் வலயமிட்டு பிடித்தவனாகவும் மற்றும் மூன்று விரலையும் இடது புறங்கை மீது நீட்டி பிறித்தவனாக தொப்புளுக்கு கீழாலே வைக்கவும். பெண் பிள்ளை முழங்கை விழாவில் சேர்ந்ததாக விரலை வலையம் இட்டு பிடிக்காமல் இடது முன் கையின் பேரில் வலது முன் கை வைத்து நெஞ்சின் பேரில் வைக்கவும். பின்பு அவூதும் பிஸ்மிலும் அல்ஹம்தும் ஓதி ஆமீன் சொல்லி ஒரு சூரத்து அல்லது ஒரு பெரிய ஆயத்து அல்லது சிறிய மூன்று ஆயத்து ஓதவும். முக்ததியானவன் தனாவையும் ஆமீனையும் தவிர வேறு ஒன்றையும் ஓதக்கூடாது. ஆனால் குர்ஆனை இமாம் இரைந்து ஓதும் போது வந்து சேர்ந்த முக்ததி தனா ஓத மாட்டான். மஸ்புக்கானவன் தனாவுக்கு முந்தி விட்டதை தொழுகிறதற்காக வேண்டி எழும்பின போது தனா ஓதுவான். பின்பு கிராஅத் முடிந்த உடன் அல்லாஹ் அக்பர் என்று சொன்னவனாக ரூகூ∴ செய்யவும். ரூகூயில் பார்வையை கால் மீது வைத்து விரல்களை நன்றாக விரித்து முட்டுக்காலை பிடித்து இரண்டு பரண்டை முலியையும் சேர்த்து முதுகு தலை பின்னந்தட்டு இவைகளை சிறயாக வைக்கவும். பெண் பிள்ளை சறீரம் எல்லாம் சேர்த்து முட்டுக்கால் எட்டுகிற மட்டும் வைக்கவும். ரூகூவில் மூன்று தரம் அல்லது அதற்கு அதிகம் ஒற்றைபடையாக

سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ

என்று தஸ்பீஹ் சொல்லவும். இமாம்

سَمِعَ اللهُ لِمَنْ حَمِدَه

என்று சொன்னவனாக எழும்பினால் முக்ததி

اَللّٰهُمَ رَبَّنَا وَلَكَ الْحَمْدُ

அல்லது

اَللّٰهُمَ رَبَّنَا لَكَ الْحَمْدُ

என்று சொல்லவும். தனத்து தொழுகிறவன் உயரும் போது தஸ்மீஊன் நிலையில் வந்த பின் தஹ்மீதும் சொல்வான். பின்பு சுஜுதுக்கு குனியும் போது அல்லாஹ் அக்பர் என்று சொல்லை துவக்கி நெற்றியை வைக்கும் போது முடிக்கவும். அதில் முந்தி இரண்டு முட்டுக்காலையும் பின்பு இரண்டு கையையும் பின்பு மூக்கையும் பின்பு நெற்றியையும் வெத்து கை விரல்களை விரியாமல் கிப்லாபக்கமாக பெருவிரல் காதிற்கு சரியாகவும் கால்விரல்களின் நுனிகளின் கிப்லா பக்கம் இருக்கும்படி பாதத்தை நிறுத்தி இரண்டு கொடுங்கையை விலாவை விட்டும் வயிற்றை இரு துடையை விட்டும் அகற்றி பார்வையை மூக்கின் மீதும் கன்னத்தின் மீதும் வைத்து இரு முன்கையிற்கு இடையில் நெற்றியை வைத்து சரீரத்தின் கணம் ஏழு உறுப்புகளின் மீது பொருக்க வைத்து சூஜுது செய்யவும். பெண் பிள்ளை கொடுங்கையை விழாவிற்கும் வயிற்றை துடையிற்கும் சேர்ந்தவளாக சூஜுது செய்யவும். ஆதில்

سُبْحَانَ رَبِّيَ الْاَعْلٰي

என்று ரூகூலில் சொல்லிய கணக்குபடி தஸ்பீஹ் செய்து தக்பீர் சொன்னவனாக தலையை உயர்த்தி முழங்கால் மீது கையை வைத்து அத்தஹிய்யாத் இருப்பை போல் இருந்து ஒரு தஸ்பீஹ் மட்டுக்கு தரிபட்டு தக்பீர் சொன்னவனாக இரண்டாவது சுஜுதுக்கு போய் முன்போலவே முடித்து விட்டு இருப்பில் இருக்காமல் தக்பீர் சொன்னவனாக முதல் நிலையில் மூக்கை முட்டுக்கால் இவ்வொழுங்குபடி உயர்த்தி எழும்பி நிலையில் வந்து தனாவும் அவூதும் ஓதாமல் இரண்டாம் ரக்அத்தையும் முந்தின ரக்அத்தை போல் தொழவும். இரண்டாம் ரக்அத்துடைய இரண்டாம் சுஜுதையும் விட்டுட எழுந்து வலது காலின் விரல்கள் கிப்லா பக்கம் இருக்கும்படியாக நட்டி இடது காலை விரித்து இரண்டு சவநத்திற்கு இடையிலாக அதின் பேரில் இருந்து கொணடு விரல்களின் நுனி முட்டுக்காலுக்கு முடுகுதலாக இருக்கும்படியாக இருந்து துடையின் பேரிலும் இரு கையை வைத்து உட்காரவும். பெண் பிள்ளைகள் இரு காலையும் வலது புரத்தில் ஆக்கி

இடது சவனத்தின் பேரில் இருக்கவும். பின்பு எல்லோரும் பார்வையை மடிமீது வைத்து அத்தஹிய்யாத்தை அப்துஹூ வரஸூலுஹூ வரையில் ஓதுவார்கள். இனி அத்தஹிய்யாத் என்று ஓதும் போது அல்லாஹ் தஆலாவிற்கு காணிக்கை வைக்கிரதாகவும் அஸ்ஸலாமு அலைக்க என்று ஓதும் போது நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் பேரில் ஸலாம் சொல்லுகிறதாகவும் அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் என்று சொல்லும் போது தன் பேரிலும் வானம் பூமியில் உள்ள ஸாலிஹான அடியார்கள் பேரிலும் ஸலாம் சொல்லுகிறதாகவும் அஸ்ஹது என்று கூறும் போது சாட்சி சொல்கிறதாகவும் நிய்யத்து செய்து கொள்ளவும். இன்னும் அஸ்ஹது என்ற சொல்லிடத்தில் கலிமா விரலுக்கு அடுத்த மூன்று விரலையும் மடக்கி பெருவிரல் தலையை கலிமாவிரலின் நடு முளியில் வைத்து லாயிலாஹ என்று சொல்லும் போது கலிமா விரலை உயர்த்தி இல்லல்லாஹூ என்ற சொல்லிடத்தில் அவ்விரலை வைத்து இவ்விதம் ஷைக்கினை செய்யவும். பர்ளிலும் வித்ரிலும் ராத்திபான சுன்னத்துகளிலும் முந்தின இருப்பில் அப்துஹூ வரஸூலுஹூ என்றதற்கு அதிகம் ஓத மாட்டான. பர்ளில் பிந்தின இரண்டு ரக்அத்திலும் பாத்திஹா மட்டும் ஓதவும். ஆனால் அதில் பாத்திஹா அல்லது மூன்று தஸ்பீஹ் அல்லது வாய்மூடி நிற்கிறது இந்த மூன்றிற்கிடையில் அவனுக்கு இஹ்தியார் உண்டாகி இருப்பதினால் பாத்திஹா ஓதுகிறது முஸ்தஹப்பாக இருக்கும். பின்பு இரண்டாம் இருப்பிலும் முந்தின இருப்பின் ஒழுங்கின்படி இருந்து அத்தஹிய்யாத் ஓதி ஸலவாத்தும் துஆவும் ஓதி கன்னத்தின் வெள்ளையை பின்னால் இருப்பவர்கள் காணும்படி வலது புறம் முகத்தை திருப்பி தனித்து தொழுகிறவன் மலக்குகளை நிய்யத் செய்தவானவும் இமாம் தன்னுடன் சேர்ந்த கவ்முகளையும் நிய்யத் செய்தவனாகவும் முக்ததியானவன் இமாம் ஜமாஅத் மலக்குகள் முதலானவர்களை நிய்யத் செய்தவனாகவும் தஹ்ரீமாவைப் போல் இமாமுடன்

اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللهِ

என்று வலது புறம் ஸலாம் சொல்லி அதுபோல் இடது புறம் ஸலாம் சொல்லி முடிக்க வேண்டும்.

பர்ளுக்குப்பின்னால் சுன்னத்தான தொழுகை இல்லாவிட்டால் இஸ்தி∴பார் செய்யவும். சுன்னத் தொழுகை உண்டாகி இருந்தால்

اَللّٰهُمَّ اَنْتَ السَّلَامُ ، وَمِنْكَ السَّلَامُ، تَبَارَكْتَ يَاذَا الْجَلَالِ وَ الْاِكْرَامِ

போல் ஒத்த சிறிய துஆ ஓதி எழுந்திருந்து கொஞ்சம் நகர்ந்து நின்று சுன்னத் தொழுது முடித்து விட்டு இஸ்தி∴பார் செய்யவும். இஸ்தி∴பார் ஆகிறது

اَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ الَّذِيْ لَااِلٰهَ اِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّوْمُ وَاَتُوْبُ اِلَيْهْ

என்று மூன்று விடுத்தம் சொல்லி பின்

ٱللَّهُ لاَ إِلَـٰهَ إِلاَّ هُوَ ٱلْحَىُّ ٱلْقَيُّومُ لاَ تَأْخُذُهُ سِنَةٌ وَلاَ نَوْمٌ لَّهُ مَا فِى ٱلسَّمَاوَاتِ وَمَا فِى ٱلأَرْضِ مَنْ ذَا ٱلَّذِى يَشْفَعُ عِنْدَهُ إِلاَّ بِإِذْنِهِ يَعْلَمُ مَا بَيْنَ أَيْدِيهِمْ وَمَا خَلْفَهُمْ وَلاَ يُحِيْطُونَ بِشَيْءٍ مِّنْ عِلْمِهِ إِلاَّ بِمَا شَآءَ وَسِعَ كُرْسِيُّهُ ٱلسَّمَاوَاتِ وَٱلأَرْضَ وَلَا يَؤُوْدُهُ حِفْظُهُمَا وَهُوَ ٱلْعَلِىُّ ٱلْعَظِيْمُ

என்று பின்பு குல்ஹூவல்லாஹ், குல் அவூது பிரப்பில் பலக், குல் அவூது பிரப்பின் நாஸ் இம்மூன்று சூராவையும் ஒவ்வொரு விடுத்தம் ஓதி, சுப்ஹானல்லாஹ் 33 தரம், அல்ஹம்துலில்லாஹ் 33 தரம், அல்லாஹ் அக்பர் 33 விடுத்தம் ஓதி

لَا اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَ لَهُ الْحَمْدُ وَهُوَ عَلٰى كُلِّ شَيْئٍ قَدِيْرٌ

ஒரு விடுத்தம் ஓதவும். பின்பு

لَا اِلٰهَ اِلَّا اللهُ

10 விடுத்தம் திக்ரு சொல்லி இரு கையையும் நெஞ்சுக்கு நேரே உயர்த்தி துஆ ஓதவும்.

**பாப் பீ பலீலத்தில் ஜமாஅத்:**

ஜமாஅத்துடன் தொழுகிற வருசையில் பேசும் பாடம்.

ஹதீது: ரஸூல் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள். ஒரு மனிதன் தன் வீட்டில் தனியே தொழுகிறதைக்கான பள்ளியில் ஜமாஅத்துடன் தொழுகிறது இருபத்தைந்து

தரஜா அதிகம் ஒரு ரிவாயத்தில் இருபத்தியேழு தரஜா அதிகமாக இருக்கும் என்றும் ஒரு மனிதன் நாற்பது நாளைக்கு ஜமாஅத்துடன் முந்தின தக்பீரில் சேர்ந்து தொழுதால் அவனை நரகத்தை விட்டும் முனாபிக்குதனத்தை விட்டும் நீக்கிவிட்டான் என்றும் உரிமை செய்து எழுபப்படும் என்றும் வந்திருக்கிறது. அல்லாஹ் தஆலாவும் அவனுடைய மலக்குகளும் சப்புகளின் பேரில் ஸலவாத்து சொல்வார்கள். உங்கள் சப்புகளை நெருக்கி வையுங்கள். உங்களுடைய கைகளை ஒருவருக்கொருவர் இடிக்காமல் மெல்லினமாக வையுங்கள். இடையில் ஷைய்தான் நுழையாமல் இருப்பதற்காக இடை(வெளி)களை அடைத்து கொள்ளுங்கள். யாராவது இடங்கிடந்ததை தேடி பார்த்து அடைத்து நிற்ப்பானேயானால் அவனுக்கு அல்லாஹ் தஆலா ஒரு தரஜாவை உயர்த்தி விடுவான் என்றும் உங்களில் ஒருவன் இமாமுக்கு முன்பாக தலையை உயர்த்தினால் அல்லது வைத்தால் அவன் தொழுகையை அல்லாஹ் தஆலா ஒப்புக்கொள்ள மாட்டான் என்றும் ஒரு சப்பை ஒரு மனிதன் சேர்ந்தால் அவனை அல்லாஹ் தஆலா சேர்த்துக் கொள்வான் என்றும் முறித்தால் அவனை அல்லாஹ் தஆலா முறித்து விடுவான் என்றும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுலமானார்கள்.

ஹதீது: ஒரு நாள் அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து அல்லாஹ்வுடைய ரஸூலே இந்த மதீனத்தில் புளு பூச்சிகள் மிகுதமாகவும் அய்வாய் (ஆபத்தான) மிருகங்கள் அதிகமாகவும் இருக்கிறது. நானோ கண் தெரியாதவனாகவும் வீடு தூரமானவனாகவும் இருக்கிறேன். ஆனால் எனக்கு ஒரு வழிகாட்டி இருந்தும் சில நேரங்களில் அவன் எங்காவது போகிவிடுகிறான். எனக்கு இவ்விதமாக இருப்பதால் ஜமாஅத்தை விட்டு நான் வீட்டில் தொழும்படி எனக்கு உத்துரவு உண்டா என கேட்க அதற்கு உமக்கு பாங்கு சப்தம் கேட்குமா என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள் அதற்கு ஆம் என்றார் உடனே உனக்கு ஜமாஅத்தை விட உத்தரவு இல்லை. ஜமாஅத்திற்கு ஹாலிராக வேண்டும் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள். ஆனதை பற்றியே (ஆகவேதான்) இமாம் ஜமாஅத்துடன் தொழுகிறது ஆண் பிள்ளைகளுக்கு கட்டாயமான சுன்னத்தாக இருக்கும். மேலும் பலமான சொல்படி வாஜிபாக இருக்கும். இனி ஜமாஅத்தில் குறைந்தது ஒரு முக்ததியும் இமாமுமாக இருக்கும். ஆனபோதே (ஆகையினால்) ஒரு முக்ததியை கொண்டு ஜமாஅத்துடைய வருஷை உண்டாகி விடும். ஒவ்வொரு முக்ததியை ஆக்கிலான (புத்தி சுவாதீனமில்லாத) சிறு பிள்ளையானாலும் பெண் பிள்ளையானாலும் வீட்டில் ஆனாலும் சரி.

**இமாமுக்கு ஷர்த்துகள் ஆறு:**

1. முஸ்லிமாக இருக்கிறது.
2. பாலிகாக இருக்கிறது.
3. ஆக்கிலாக இருக்கிறது.
4. ஆண் பிள்ளையாக இருக்கிறது.
5. தொழுகை கூடுகிற மட்டில் குர்ஆனில் பாடமாக இருக்கிறது. ஹர்பை பேதமாகும்படி நாவின் கேடுதலை விட்டும் ஸலாமத்தாக இருக்கிறது.
6. வயிற்றோற்றம் போல் ஒத்த மற்ற தங்கடங்களை விட்டும் ஸலாமத்தாக இருக்கிறது.

**இமாமை தொடர்வதற்கு பத்து ஷர்த்துகள் உண்டாம்:**

1. இமாமை தொடர்வதை முக்ததியானவன் நிய்யத் செய்கிறது.
2. இருவருடைய தளமும் ஒன்றாய் இருக்கிறது.
3. இருவரின் தொழுகையும் ஒன்றாய் இருக்கிறது.
4. முக்ததி உடைய எண்ணத்தில் இமாமுடைய தொழுகை தருஸ்தாக இருக்கிறது.
5. தொழுகையில் பெண் பிள்ளையுடைய பாதம் அவளுடைய எந்த உறுப்புக்கும் முன்னால் ஆவது அல்லது வலது பக்கம் இடது பக்கம் ஆவது திறையன்றியே நேர்படாமல் இருக்கின்றது.
6. முக்ததியின் குதிகால் இமாமுடைய குதிகாலைக்காண முந்தாமல் இருக்கிறது.
7. இமாமுடைய திரும்புதல்களை அவரை காண்கிரது கொண்டு அல்லது அவருடைய சப்தத்தைக் கொண்டு அல்லது முக்ததிகளில் சிலரை காண்கிரது கொண்டு இருக்கிறது.
8. தொழுததின் பின் அல்லது முன் இமாமை முகீம் அல்லது முஸாபிர் என்று அறிகிறது.

9. இமாம் பர்ளுகளை செய்யும் போது முக்ததி அவருக்கு முந்தாமல் அவருடன் அல்லது அவருடைய செயலின் பின்னால் செய்து வருகிறது.
10. ஷர்த்துகளை இருப்பதில் முக்ததி இமாமுக்கு சரியாக அல்லது அவருக்கு தால்மையாக இருக்கிறது.

**மக்ரூஹான இமாமுகள்:** பாசிக் என்னும் ஜினாக்கள் குடி வட்டி இது போல் ஆன பெரும் பாவத்தில் பகிரங்கமானவன் இமாமத்து செய்வது மக்ரூஹ் தஹ்ரீமாக இருக்கும். குருடனும் அடிமையையும் இல்மு இல்லாத பட்டிக்காட்டனையும் ஜினாவில் பிறந்தவனையும் முகவரை கீராத அழகான வாலிபனையும் கொச்சை புத்திகாரனையும் பக்கவாதக்காரனையும் இரேம் எல்லாம் பறந்த வெங்குஸ்டக்காரனையும் நொன்டியையும் குஷ்டவியாதிகாரனையும் ஆண் உடம்பு தறிபட்டவனையும் மலம் ஜலம் காற்று இவைகளை அடக்கிக் கொண்டு தொழுகிறவனையும் ஒற்றைக்கண்ணனையும் நம்முடைய மத்ஹபில் பர்ளு ஷர்த்து முறித்தல் இவைகளை பேனுகிறது சக்கான மத்ஹபுகாரனையும் முற்படுத்துகிறதும் இவர்களால் முன்கதிரதும் மக்ரூஹ். ஆனால் இவர்களைத் தவிர ஏற்றமானவர்கள் கிடையாது போனால் அவர்களுடைய இமாமத்து மக்ரூஹ் அல்ல. இன்னும் இந்த மக்ரூஹ்கள் ஜமாஅத்துடைய தவாபை தட்டாது ஆகையால் தனித்து தொழுகிறதைகான அவர்களுக்குப் பின்னால் தொழுகிறது ஏற்றம்.

**ஷப்புகளின் வருஷைகள்:**
அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை தொட்டும் ரிவாயத்து செய்யப்படிருக்கிறது. அவர்கள் சொன்னார்கள் ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம் பற்றினார்கள். உங்களுடைய சப்புகளை சரியாக்குங்கள். ஏனெனில் திட்டமாக சப்புகளை சரியாக்குகிறது தொழுகையை செவ்வையா(நிரப்பமா)க்கிறதில் நின்றுமாயிருக்கம் என்று. இன்னும் அவர்களை தொட்டும் ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறதில் அவர்கள் சொன்னார்கள் ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள் உங்களுடைய சப்புகளை நெருக்குங்கள் இன்னும் அவைக்கிடையில் (இடைவெளியின்றி) முடுகுதலாக்குங்கள். இன்னும் கழுத்துக்களை கொண்டு நேராக்குங்கள். ஏனெனில் என்னுடைய நப்ஸு அவன் வஷனத்தில் இருக்கிறதை அதை அந்த நாயன் பேரில் சத்தியமாக திட்டமாக நான் ஷைய்தானை சப்பில் இடையில் நின்றும் அவன் கருத்த ஆடை போல் புகுதலை காணுகிறேன் என்று. இதை அபுதாவூது ரிவாயத் செய்தார்கள். ஆதலால் சப்பு நிற்கிறதில் இடைவழியை அடைத்து சிலரோடு சிலர் சேர்ந்து தோள் புயங்களை சரியாய் வைக்க வேண்டும். அது கொண்டு நாமும் அவர்களை அவர்களை ஏவ வேண்டும். இன்னும் சப்பு நிற்கிறதில் முக்ததி ஒருவனாக இருந்தால் அவன் சிறு பிள்ளையானாலும் பெரியவனானாலும் இமாமுடைய வலது பக்கத்தில் இடை விடாமல் முந்தாமலும் பிந்தாமலும் குதிகாலை சரியாக வைத்து நிற்க வேண்டும்.

**பாப் பீ ஸலாத்தில் வித்ரி வன்னவாபில்:**
வித்ரு தொழுகையையும் நபிலான தொழுகைகளையும் பற்றி பேசும் பாடம். சுன்னத்தான தொழுகைகளை நபில் என்று சொல்லப்படும். நபிலான தொழுகையை சுன்னத் என்று சொல்லக்கூடாது.
ஹதீது: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளம் பற்றினார்கள் இரவில் உங்களுடைய தொழுகையில் கடைசியானதை வித்ராக்கி கொள்ளுங்கள். வித்ரைக் கொண்டு சுப்ஹை முந்துங்கள். யாராகிலும் ஒருவன் இரவின் ஒடுக்கத்தில் நின்றும் அவன் எழும்ப மாட்டான் என்பதை பயந்தானாகில் அதன் துவர்க்கத்தில் அவன் வித்ரு தொழுகவும். இன்னும் யாராகிலும் ஒருவன் அதன் ஒடுக்கத்தில் அவன் எழும்புவதை அவிழ்க்கையா(நம்புவா)னாகில் இரவினுடைய ஒடுக்கத்தில் அவன் வித்ரு தொழவும். ஏனெனில் உறுதியாக இரவின் ஒடுக்கத்தின் தொழுகையாகிறது ஹாலிராக்கப்பட்டதாயும் மிக வருஷையானதாயும் இருக்கும் என்று திருவுளமானார்கள். இன்னும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள் சிவந்த ஒட்டகத்தை காண ஹைராக (சிறப்பாக) இருக்குமே அப்படிக்கொத்த ஒரு தொழுகையை கொண்டு அல்லாஹ் தஆலா உங்களுக்கு உபகாரம் செய்து இருக்கிறான் அதாவது வித்ராயிருக்கும். அதை அல்லாஹ் தஆலா இஷாவுக்கும் பஜ்ருக்கும் இடையில் வைத்திருக்கிறான் என்று திருவுளமானார்கள். இன்னும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளம் பற்றினார்கள் மனிதர்களே! உங்களுடைய பர்ளான தொழுகையின் கூலியை நிறப்பப்படுத்துகிறதற்காக வேண்டி நபிலான வணக்கங்களை நிறைவேற்றிவாருங்கள் என்று

திருவுளம் பற்றினார்கள். இன்னும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள் யாராகிலும் ஒருவன் என்னுடைய சுன்னத்தை உவந்தால் அவன் என்னை உவந்தான் என்னை உவந்தவன் சுவர்க்கத்தில் என்னுடன் இருப்பான். இன்னும் ஒரு ரிவாயத்தில் என்னுடைய சுன்னத்தை விட்டவன் என்னில் நின்றும் உள்ளவனல்ல என்று திருவுலமானார்கள்.

**வித்ரு தொழுகையின் ஹுகும்கள்:**
வித்ரு தொழுகையாகிறது வாஜிபாக இருக்கும். வித்ராகிது ஒரு ஸலாம் கொண்டு மூன்று ரக்அத்தாக தொழ வேண்டும். அதில் மூன்றாம் ரக்அத் உடைய ரூக்விற்கு முன்னாலே இரண்டு கையையும் முந்தின தக்பீருக்கு உயர்த்துவது போல் உயர்த்தி தக்பீர் சொல்லி கட்டி குனூத்தை அமர்ந்து ஓதியபின் ருக்விற்கு தக்பீர் சொல்லி தொழுது முடிக்கவும். ஆனால் முந்தின ரக்அத் இமாமுடன் தவிரன மஸ்புக்கானவன் இமாமுடன் மாத்திரம் குனூத் ஓத வேண்டும். ரமலானில் வித்ரை இமாம் ஜமாஅத்தாக தொழுகிறது சுன்னத். மற்ற நாட்களில் மஃரூஹ். ரமலானில் இஷாவின் பர்ளை அல்லது தராவீஹை அவ்விரண்டில் ஒன்றையாவது இமாமுடன் தொழுதால் மாத்திரம் வித்ரையும் இமாமுடன் தொழலாம்.

**பாப் பீ பலாயிலுத் தராவீஹ்:**
தராவீஹ் தொழுகையின் வருஷையிலே பேசும் பாடம்.
ஹதீது: ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுலமானார்கள் யாராகிலும் ஒருவன் ரமலான் மாதத்து இரவில் முழித்து தவாபை தேடினவனாகவும் அதை உறுதி கொண்டவனாகவும் நபிலான வணக்கங்களை வணங்கினால் அவனுடைய முந்தின பாவங்களை அல்லாஹ் தஆலா பொருத்து விடுவான் இன்னும் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள் ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள், அர்ஷை சுற்றி ஹதீரத்துல் குத்ஷி எனும் ஒரு தளம் உண்டாகி இருக்கிறது. அதில் மட்டில் (கணக்கில்) அடங்காத மலக்குகள் இருந்து ஓயாமல் நாயனை வணங்குகிறார்கள். ரமலானுடைய இரவுகளில் அவர்கள் பூமியில் இரங்கி ஆதமுடைய மக்களோடு தொழ நாயன் இடத்தில் உத்தரவு பெற்று எல்லா இரவிலும் இறங்குகிறார்கள். ஆகையால் அவர்களுடைய மேனி ஒருவன் மேல் பட்டாலும் அல்லது ஒருவனுடைய மேனி அவர்கள் மேல் பட்டாலும் அவன் சீதேவித்தனம் பெறுவான். அவனுக்கு மூதேவித்தனமே இல்லை என்று திருவுளமானார்கள். இந்த ஹதீதை அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களில் நின்றும் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கேட்கவே இதற்கு நாம் மெத்த பாத்திரம் என்றும் சொல்லி மனிதர்களை சேகரம் செய்து தராவீஹை நடத்தினார்கள்.

**தராவீஹ் தொழுகையின் விபரம்:**
தராவீஹ் தொழுகையாகிறது ரமலான் மாதத்தில் ஒவ்வொரு இரவிலும் 20 ரக்அத் தொழுகிறது. ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் சுன்னத் முஆக்கதாவாக இருக்கும். ஏஃனி பலவந்தமாக்கப்பட்ட சுன்னத்தாக இருக்கும். இதை இரண்டு ரக்அத்தாக ஸலாம் சொல்லி முடித்து 20 ரக்அத்தையும் நிறப்பமாக்குவது மிகவும் ஏற்றமாகும். ஆதை இமாம் ஜமாஅத்தாக தொழுகிறது சுன்னத்துல் கிபாயாவாக இருக்கும். அதனுடைய வக்தாகிறது இஷா தொழுத பின் கிழக்கு வெழுக்கிற வரையிலாக இருக்கும். ரமலான் மாதம் முழுதும் தராவீஹில் ஒரு விடுத்தம் குர்ஆன் முழுதையும் ஓதி முடித்து ஹதம் செய்கிறது சுன்னத்தாக இருக்கும்.

**இஸ்ராக் தொழுகையின் விபரம்:**
இஸ்ராக் தொழுகையாகிறது பஜ்ரு தொழுத பின் பொழுது கிழம்புகிற வரையிலும் திக்கைக் கொண்டும் தஸ்பீஹைக் கொண்டும் பராக்காகிறதும். பொழுது வல்லயப்பிரமானம் ஆன பின் இரண்டு ரக்அத் இஸ்ராக் தொழுகிறது முஸ்தஹப்பு.

**தஹய்யத்துல் மஸ்ஜித் தொழுகையின் விபரம்:**
பள்ளிக்குள் போன உடன் தஹய்யத்துல் மஸ்ஜித் என்று இரண்டு ரக்அத் நிய்யத் செய்து தொழுகிறது சுன்னத். உட்காரு முன் அதை தொழுகிறது ஏற்றமாக இருக்கும். அதை ஒரு நாளைக்கு ஒரு விடுத்தம் தொழுதால் போதும்.

**வுளுவின் தொழுகை உடைய விபரம்:**

வுளு செய்து முடிந்த பின் அல்லது குளித்த பின் ஈரம் உலருமுன் வுளுவின் நபில் என்று இரண்டு ரக்அத் நிய்யத் செய்து கொள்ளுகிறது முஸ்தஹப்பு.

**ளுஹா தொழுகையின் விபரம்:**
ளுஹா தொழுகையாகிறது முஸ்தஹப்பாக இருக்கும். அதன் வக்தாகிறது பொழுது உயர்ந்தது முதல் மத்தியமாகிறதற்கு கொஞ்சம் முன் வரையிலாக இருக்கும். அதற்கு சரியான வக்தாகிறது பகலையில் நான்கில் ஒரு பங்கிற்கு பின் ஜவாலுக்கு முன்னால் இருக்கும்.

**இஸ்திஹாரா தொழுகையின் விபரம்:**
இஸ்திஹாராவாகிறது ஒரு காரியம் நலவாகிறதை நாடினவனாக தொழுகிற தொழுகைக்கு சொல்லப்படும். இஸ்திஹாரா இரண்டு ரக்அத் நிய்யத் செய்து தக்பீர் கட்டி முந்தின ரக்அத்தில் குல் யாஅய்யுகல் காபிரூனும் இரண்டாம் ரக்அத்தில் குல் குவல்லாஹு அஹதும் ஓதி தொழுது முடித்தப் பின் நாட்டத்திற்கு தகுந்த சாலையப்பாரான துஆவை ஓதவும்.

**தஸ்பீஹ் தொழுகையின் விபரம்:**
தஸ்பீஹ் தொழுகையாகிறது நான்கு ரக்அத் முஸ்தஹப்பாக இருக்கும். ம∴ரூஹாக வக்தை தவிர மற்ற நேரங்கடங்களிலும் ஒரு இரவு பகல் அடங்களிலும் ஒரு விடுத்தம் தொழுவதும் ஏலாவிட்டால் கிழமையில் ஒரு விடுத்தம் அல்லது மாதத்திற்கு ஒரு தரம் அல்லது ஒரு வருடத்திற்கு ஒரு தரம் அல்லது வாழ்நாளில் ஒரு தரம் தொழுவது இதில் மிகுதமான தவாப் உண்டாகி இருக்கிறது என்று ஹதீதில் வந்திருக்கிறது.

**தஹஜ்ஜுத் உடைய தொழுகையின் விபரம்:**
தஹஜ்ஜத் உடைய தொழுகையை பற்றி அல்லாஹ் தஆலா குர்ஆனில்
وَمِنَ ٱلَّيْلِ فَتَهَجَّدْ بِهِ نَافِلَةً لَّكَ عَسَىٰٓ أَن يَبْعَثَكَ رَبُّكَ مَقَاماً مَّحْمُوداً
ஏ∴னி முஹம்மதே (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) இரவில் சிலதை குர்ஆன் ஓதி மேல் மிச்சமாக இருக்கிற ஹாலில் தொழுவதற்காக வேண்டி நீர் உரக்கத்தை விட்டும் உம்மை உம்முடைய நாயன் மகாமன் மஹ்பூதில் எழுப்ப போதும் என்று திருவுலமானான்.
ஹதீது: ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுலம்பற்றினார்கள். தஹஜ்ஜத் தொழுகையை பற்றி பிடியுங்கள். இரண்டு ரக்அத் ஆனாலும் சரி என்று. இன்னும் இரவின் நடுவில் ஒரு அடியான் தொழும் இரண்டு ரக்அத்தாகிறது அவனுக்கு துன்யாவைக் காணவும் அதில் உண்டான நி∴மத்துகளைக் காணவும் மெத்த ஹைராக இருக்கும் என்று திருவுலம்பற்றினார்கள். இன்னும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுலம்பற்றினார்கள் அல்லாஹ் தஆலா ஒரு மனிதனுக்கு ரஹ்மத் செய்வானாகவும் எந்த மனிதனானால் அவன் இரவில் எழும்பி தானும் தொழுது தன் பெண் ஞாதியையும் தொழ எழுப்பி தொழச் சொல்லி அவள் எழும்பாவிட்டால் அவளுடைய முகத்தில் தண்ணீரைத் தெழித்தானே அந்த மனிதனுக்கு ரஹ்மத் செய்வானாகவும். இன்னும் ஒரு பெண் பிள்ளைக்கு ரஹ்மத் செய்வானாகவும் எந்த பெண் பிள்ளையானவள் தானும் இரவில் எழும்பி தொழுது தன் புருஷனையும் தொழச் சொல்லி அவன் எழாவிட்டால் அவனுடைய முகத்தில் தண்ணீர் தெழிப்பாலே அந்த பெண் பிள்ளைக்கு ரஹ்மத் செய்வானாகவும் என்று திருவுலமானார்கள். ஆகையால் தஹஜ்ஜத் தொழுகையாகிறது சுன்னத்தாக இருக்கும். அத்தொழுகை குறைந்தது இரண்டு ரக்அத் நடுத்தரம் நான்கு ரக்அத் மிகுந்தது எட்டு ரக்அத்தாக இருக்கும். இது இரவில் விடிய ஏழு அறை நாளிகை இருக்கும் போல் அல்லது ஒரு நாளிகை இருக்கும் போது தொழுகிறது ஏற்றமாக இருக்கும். அதை வழமையான பின் உதிர் அன்றி விடுகிறது ம∴ரூஹ். தஹஜ்ஜத்தாகிறது நித்திரைக்கு பின்னாலாக இருக்க வேண்டும். ஒருவன் உறங்காமல் தொழுதால் அதை தஹஜ்ஜத் என்று சொல்லக் கூடாது. ஸலாத்துல் லைல் என்று சொல்ல வேண்டும். ஆனால் அதில் பலன் உண்டு.

**ஸபருடைய நபில் தொழுகை:**
ஸபர் புறப்படும் போது வீட்டில் இரண்டு ரக்அத் தொழுகிறதும் ஸபரை விட்டும் வந்து சேரும் போது இரண்டு ரக்அத் பள்ளியில் தொழுவதும் முஸ்தஹப்பாக இருக்கும்.

**தாய் தகப்பன் மீது தொழுகிற விபரம்:**

அதாவது வெள்ளிக்கிழமை இரவில் ம.∴ரிபுக்கும் இஷாவிற்கும் இடையில் இரண்டு ரக்அத் தொழுவதும். ஓவ்வொரு ரக்அத்திலும் பாத்திஹா ஒரு விடுத்தம் ஆயத்துல் குர்ஷி 15 விடுத்தம் குல் குவல்லாஹு அஹத் 15 விடுத்தம் ஸலவாத்து 20 விடுத்தம் ஓதி தொழுது அதை தவாபை தாய் தகப்பனுக்கு பஹ்ஸ் செய்வது முஸ்தஹப்பு. அப்படி செய்வது தாய் தகப்பனுக்கு செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றியதாக இருக்கும்.

**கிராணம் பிடிக்கும் போல் ஒத்த வேலையில் தொழுகிறது:**
சந்திர கிரகணம் பிடிக்கிறதும் போதும் அடை மழை மிகுந்த இடிகள் கடினமான காற்று பூமி தழும்புதல் பேதி போல் ஒத்த வியாதிகள் பகைவரால் நின்றும் உண்டான திடுக்கம் இவை போல் ஒத்தது உண்டான போது அவர்அவரே தனித்தனியே இரண்டு ரக்அத் தொழுவது முஸ்தஹப்பு.
ஹதீது: நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனிதர்களே இந்த திடுக்கங்களில் நின்றும் ஒன்றை நீங்கள் கண்டீர்களாகில் தொழுகை அளவில் ஒதுங்கி கொள்ளுங்கள் என்று திருவுலமானார்கள்.
இனி சூரிய கிரண வேலையில் ஜும்ஆ உடைய இமாம் குத்பா தவிர மற்ற ஷர்துகளைக் கொண்டு இரண்டு ரக்அத் ஜமாஅத்தாக தொழுகிறதும் தொழுது முடித்த பின் சூரியன் வெளியாகும் வரை துஆ கேட்டு ஜனங்கள் ஆமீன் சொல்வதும் சுன்னத். ஜும்ஆ உடைய இமாம் ஹாலிராகாவிட்டால் தனியே தொழுகிறது ஏற்றம்.

**களா தொழுகையின் விபரம்:**
தப்பிவிட்ட தொழுகைக்கும் வக்துவுடைய தொழுகைக்கும் இடையில் இன்னும் தப்பிவிட்ட தொழுகையை ஒன்றுக்கு ஒன்று இடையிலும் தர்தீபு வாஜிபாக இருக்கும். அதன் விபரமாவது ஒருவனுக்கு ஐந்து வக்து தொழுகை வரையிலும் களாவாக இருந்து வக்து தொழுகை வந்து விடுமானால் அந்த களாவை தொழுத பின்னால் தான் வக்தின் தொழுகையை தொழ வேண்டும். அது வித்ராக இருந்தாலும் சரியே. அதையும் பஜ்ருக்கு முன் களா செய்ய வேண்டும். சாஹிபுத் தர்தீப் என்னும் தர்தீப் வாஜிபாக உள்ளவன் தப்பிவிட்டதை களா செய்யாமல் வக்துடையதை அதை விட முற்படுத்தினால் கூடாது. இன்னும் ஒருவனுக்கு சில தொழுகைகள் களாவாக இருந்தால் அதுகளை களா செய்யும் போது பஜ்ரு லுஹர் அஸர் ம.∴ரிபு இஷா இவ்விதமாக ஒழுங்குடன் தொழ வேண்டும். ஆனால் தப்பிவிட்ட தொழுகை வித்ரைத் தவிர தான் புலூகானது முதல் 5 வக்திற்கு அதிகமாக இருந்தாலும் அல்லது களாவை மறந்து வக்தியாவான தொழுகையை தொழு விட்டாலும் அல்லது வக்தியாவான தொழுகையின் வக்து கிட்டுமையாகி விட்டாலும் தர்தீப் விழுந்து போகும். தவரின தொழுகை ஐந்திற்கு அதிகப்பட்டதானால் தர்தீப் விழுந்த பின் அதுகளை செய்து வந்ததில் ஐந்திற்கு குறைவாகி விட்டாலும் தர்தீப் மீலாது.

**முஸாபிர் தொழுகையின் விபரம்:**
ஒரு மனிதன் முகீமாக ஊரை விட்டு நடுத்தரமாக இராகத்துடன் நடந்து மூன்று நாளையில் போய் சேரும் படியான ஊரை நாடி பயணம் புறப்பட்ட ஊரைக் கடந்தால் அவனை முஸாபிர் என்று சொல்லப்படும். அவன் அந்த ஊரின் எல்கையை விட்டும் கடந்தது முதல் நான்கு ரக்அத் பர்ளான தொழுகைகளை இரண்டு ரக்அத்தாக தொழுகிறது வாஜிப். ஒரு ஊரில் போய் சேர்ந்து அவ்வூரில் 15 நாள் அல்லது அதிகமாக இருக்க வேண்டும் என்று நிய்யத் செய்தால் அது முதல் அவன் முகீமாகி விட்டான். ஆகையால் நான்கு ரக்அத்தும் சரியாய் தொழ வேண்டும். மூன்று ரக்அத்துள்ள தொழுகைகளிலும் பர்ளைத் தவிர உள்ள தொழுகைகளிலும் கஸ்ரு கிடையாது.

**பாப் பீ பலாயிலில் ஜும்ஆ:**
ஜும்ஆவுடைய வருஷையில் பேசும் பாடம்.
قَالَ اللهُ تَعَالٰي يَاَيُّهَاالَّذِيْنَ اٰمَنُوْا اِذَا نُوْدِيَ لِلصَّلٰوةِ مِنْ يَوْمِ الْجُمْعَةِ فَاسْعَوْا اِلٰي ذِكْرِ اللهِ وَذَرُو الْبَيْعَ ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ
ஏ.∴னி ஒ ஈமான் கொண்டவர்களே ஜும்ஆவுடைய நாளில் நின்றும் தொழுகை அளவில் கூப்பிடப்பட்டால் நீங்கள் அல்லாஹ் உடைய திக்ரு அளவில் போகுங்கள். கருத்தாவது தொழுகை அளவில் போகிறது உங்களுக்கு ஹைராக இருக்கும் என்று அல்லாஹ் தஆலா குர்ஆனில் திருவுலமானான்.

ஹதீது: ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள். யாராகிலும் ஒருவன் ஜனாபத்து குளிப்பு போல் ஜும்ஆவுடைய நாளில் குளித்து விட்டு பின்பு அவன் முந்தின சாஅத்தில் ஜும்ஆவிற்குப் போனால் ஒரு ஒட்டகம் குர்பான் கொடுதத் தவாபும், இனி இரண்டாம் சாஅத்தில் போனால் ஒரு மாடு குர்பான் கொடுத்த தவாபும், இனி மூன்றாம் சாஅத்தில் போனால் கொம்பு உள்ள ஒரு தும்மை ஆடு குர்பான் கொடுத்த தவாபும், நாலாம் சாஅத்தில் போனால் ஒரு கோழி அல்லது ஒரு சேவல் குர்பான் கொடுத்த தவாபும், ஐந்தாம் சாஅத்தில் போனால் ஒரு முட்டை குர்பான் கொடுத்த தவாபும் எழுதப்படும். இனி இமாம் வந்து விட்டால் மலக்குகள் கடிதங்களை சுருட்டி விடுவார்கள். தவாபு எழுதமாட்டார்கள். குத்பாவை கேட்டுக் கொண்டு இருப்பார்கள் என்று திருவுளமானார்கள். இன்னும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள் ஜும்ஆவுடைய நாளாகிறது இரண்டு பெருநாளைக் கானவும் மற்ற நாட்கள் அடங்களைக் காணவும் ஏற்றமாயிருக்கும். அடிமை, பெண் பிள்ளை, சிறு குழந்தை, பிணியாளன் என்ற நான்கு பேர் தவிர அந்த நாள் தொழுகை ஒவ்வொரு முஸ்லிமான மனிதர் பேரிலும் கடமையாக இருக்கும். யாராகிலும் ஒருவன் தங்கடம் இன்றி அதை விடுவானாகில் அவன் கருமத்தில் பரக்கத்தில்லை அவனுக்கு ஹஜ்ஜுடைய பலனுமில்லை சதக்காவுடைய நன்மையும் இல்லை தொழுகையுடைய வருஷையுமில்லை. இன்னும் அல்லாஹ் தஆலா என் ஷபாஅத்தை அவனுக்கு கொடுக்கவும் மாட்டான். அவன் இபாதத்தை அல்லாஹ் தஆலா ஒப்புக்கொள்ளவும் மாட்டான் என்றும் இன்னும் ஜும்ஆவாகிறது பக்கீர்களுக்கு ஹஜ்ஜாகவும் மிஸ்கீன்களுக்கு பெருநாளாகவும் இருக்கிறது என்றும் திருவுளமானார்கள். இனி முஅத்தின் பாங்கு சொன்ன உடன் வியாபாரம் கொடுக்கல் வாங்கல் முதலான வேலை அடங்களையும் விட்டு ஜும்ஆவுக்கு வர வேண்டியது வாஜிபாக இருக்கும். ஆனால் அதபும் ஒடுங்குதலும் உடைய சங்கையுடைய காலால் நடந்து வருகிறது ஏற்றமாக இருக்கும். பாங்கு சொன்னபின் துன்யாவுடைய வேலையை பார்க்கிறது தொழுது தீர்க்கிர வரை ஹராமாக இருக்கும்.

**ஜும்ஆ உடைய அதபுகள்:** ஜும்ஆவிற்கு குளித்து மனம் புசுவதும் நல்ல அழகால் ஆன உடைகளை உடுத்துவதும் நகங்ளை எடுக்கிறதும் தலை முடி இரக்கிறதும் பள்ளிக்குள் ஊதுபத்தி முதலாகிய வஸ்துகளை புகைக்கிறதும் ஜும்ஆவிற்காக காலை நேரத்தில் போகிறதும் கதீப் வருகிற வரைக்கும் இபாதத் செய்து கொண்டிருக்கிறதும் சுன்னத்தாகும்.

**பாப் பீ அஹ்காமில் ஜும்ஆ:**

ஜும்ஆ உடைய ஹுகும்களை பேசும் பாடம்.

ஜும்ஆவில் பர்ளு இரண்டு ரக்அத். சுன்னத் முன்னே நான்கு ரக்அத் பின்னே நான்கு ரக்அத்தாக இருக்கும். அத்தொழுகை விதியாகிறதற்கு அக்லும் பாலிகும் தவிர 9 காரியங்கள் ஷர்த்தாக்கப்படும்.

**ஜும்ஆ விதியாகிறதிற்கு ஷர்த்துகள் ஒன்பது:**

1. ஆண் பிள்ளையாக இருக்கிறது.
2. அடிமையில்லாத நாட்டா (ஆண்) மகனாக இருக்கிறது.
3. பட்டனத்தில் முகீமாக இருக்கும்.
4. சுவாத்தியமாக இருக்கிறது.
5. கண் குருடு அன்றி பார்வை உடையவனாக இருக்கிறது.
6. நடந்து போக சக்தி உள்ளவனாக இருக்கிறது.
7. அநீதகாரனை விட்டும் அச்சம் தீர்ந்து இருக்கிறது.
8. கடுஷாகிய மலை சேர்ட்டலாது இருக்கிறது.
9. சிறைசாலை கைதியாக இல்லாமல் இருக்கிறது.

**ஜும்ஆவிற்கு துருஷ்தாகிறதற்கு ஷர்த்துகள் ஏழு:**

1. பட்டணம் அல்லது அந்த பட்டணத்தின் வெளியிலாய் இருக்கிறது.
2. சுல்தான் அல்லது சுல்தானுடைய ஆள் உண்டாகி இருக்கிறது.
3. லுஹருடைய வக்தாக இருக்கிறது.
4. அந்த வக்திற்கு உள்ளே குத்பா ஓதி தீருகிறது.
5. குத்பாவை ஜும்ஆ கூடுகிற ஜமாஅத்துடைய முக்தாவில் தொழுகைக்கு முன்னாலே ஓதி முடிக்கிறது.

6. ஜமாஅத் உண்டாகி இருக்கிறது.
7. அதை தொழுகிற பள்ளியில் எல்லோரும் தொழும்படி உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

**இரண்டு பெருநாள் தொழுகையும் சிகத்தாகிறதற்கு ஷர்த்து:**
இரண்டு பெருநாள் தொழுகையையும் ஜும்ஆ விதியானவர்கள் பேரில் ஜும்ஆ உடைய ஷர்த்துகளில் குத்பாவைத்தவிர மற்றும் ஷருத்துகளைக் கொண்டு வாஜிபாகும். அதில் குத்பா சுன்னத்தாக இருக்கும். இந்த குத்பாவை தக்பீரைக் கொண்டு துவக்கம் செய்யவும். அது எப்படியனில் முந்தின குத்பாவை துடர்ச்சையாக 9 தக்பீர் கொண்டும் இரண்டாவதை 7 தக்பீர் கொண்டும் துவக்கம் செய்து இடைகளிலும் தக்பீர் சொல்லவும்.

**நோன்பு பெருநாள் தொழுகையின் முஸ்தஹப்புகள்:**
நோன்பு பெருநாள் தொழுகைக்கு போகும் முன் மதுரமான பேரீத்தங்களை ஒற்றரைப்படையாக தின்பதும், மிஸ்வாக் செய்வதும், குளிக்கிறதும், மனம் பூசுவதும், மிக்க அழகான உடை அணிவதும், பித்ரா வாஜிபானால் தொழுகைக்கு புறப்படும் முன் பித்ரா கொடுப்பதும், ஈத்கா அல்லது குத்பா பள்ளிக்கு கால் நடையாக போகிறதும் முஸ்தஹப்பு.

**இரண்டு பெருநாள் தொழுகையின் வக்தும் ஒழுங்குகளும்:**
பெருநாள் தொழுகையின் வக்தாகிறது பொழுது ஒரு வல்லயப்பிரமாணம் உயர்ந்தது முதல் மத்தியம் ஆகிறது வரையிலுமாக இருக்கும். தொழுகையில் இருக்கும் போது மத்தியம் ஆகிவிடில் தொழுகை பசாதாகிவிடும். பெருநாள் தொழுகையின் ஒழுங்காவது இமாம்களும் கவ்முகளும் பெருநாள் தொழுகையை நிய்யத் செய்து தக்பீர் தஹ்ரீமா சொல்லி தனா ஓதிய பின் மூன்று தக்பீர் சொல்லவும். ஓவ்வொரு தக்பீருக்கும் கையை உயர்த்திய பின் கையை கட்டாமல் தாழ விட்டு மூன்றாம் தக்பீருக்குப் பின் கையை கட்டவும். இம்மூன்று தக்பீருக்கு இடையில் மும்மூன்று தஸ்பீஹ்யுடைய கத்ருக்கு தாமதித்தவர்களாக நின்று பின்பு அஊது பிஸ்மி சொல்லி பாத்திஹாவும் சூரத்தும் ஓதி பின்பு எல்லொரும் முன் போல் கையை உயர்த்தி மூன்று தக்பீர் சொல்லி பின்பு கையை உயர்த்தாமல் ருகூஹ்வுடைய தக்பீர் சொல்லி ருகூ∴ செய்து தொழுகை முடிந்த பின் இமாம் மிம்பரில் ஏறி இரண்டு குத்பா ஓதுவார். இனி அரபா என்னும் ஒன்பதாம் நாள் பஜ்ரிலிருந்து பதிமூன்றாம் நாள் அஸர் தொழுகை வரையிலும் கூடிய 23 வக்திலும் அந்தந்த நேரத்தின் பர்ளு தொழுகை தொழுத உடனே ஆண் பிள்ளைகள் இரைந்தும் பெண் பிள்ளைகள் மெல்லவும் தக்பீர் தஸ்ரீக் ஒரு விடுத்தம் சொல்கிறது வாஜிபு. ஒரு விடுத்தத்தை காண அதிமாக்குவது முஸ்தஹப்பு.

**பித்ராவின் பயான்:**
முஸ்லிமாகிய நாட்டான்மகன் தன்னுடைய அகத்திமையான ஹாஜத்துகளை விட்டும் மேல் மிச்சமாகிய ஜகாத்தின் தொகை உடையவனாய் இருந்தால் தன்னைத் தொட்டும் தன் சிறு பிள்ளைகளைத் தொட்டும் வேலை கொள்ள அடிமைகளைத் தொட்டும் பித்ரா கொடுப்பது அவன் பேரில் வாஜிபாகும். வருஷம் நிறப்பமாகாவிட்டாலும் மொக்கும் பெண் ஞாதி, பெரிய பிள்ளைகள் கச்சவட்டத்துக்குள்ள அடிமைகள் இவர்களைத் தொட்டும் கொடுப்பது வாஜிபாகாது. இனி சிறு பிள்ளைகளுக்கு சொத்து இருந்தால் அதுகளுக்காக பித்ராவை அந்த சொத்தில் நின்றும் கொடுக்கப்படும். பித்ராவாகிறது மனிகோதும்பில் அரை மரக்காலும் பேரீத்தம்பழம், கொழி முந்திரிப்பழம், தொழி கோதுமை இவைகளில் ஒரு மரக்காலுமாக இருக்கும். ஆனால் இவைகளின் விலையை கொடுப்பது இவ்வஷ்துகளை கொடுப்பதைக் காண மெத்தவும் வருஷையாக இருக்கும். மரக்கால் ஆகிறது இந்நேரத்தில் இந்த நாட்டில் விலங்கும் பக்கா படியால் இரண்டே கால் படி கொண்டதாம். இனி வாஜிபாகிற நேரமாகிறது நோன்புப் பெருநாள் தொழுகைக்கு வெழுக்குறதிற்குண்டாக இருக்கும்.

**பாபுல் மய்யித்:**
மய்யித்துடைய பாடம். மய்யித்தை குளிப்பாட்டுகிறதும் நல்லடக்கம் செய்ய எத்தனிக்கிறதும் கபன் செய்கிறதும் தொழுவிக்கிறதும் நல்லடக்கம் செய்கிறதும் பர்ளு கிபாயாவாகும்.

**மய்யித் தொழுகைக்கு ஷர்த்து எட்டு:**
1. மய்யித்தானவர் முஸ்லிமாக இருக்கிறது.

2. துப்புரவாக இருக்கிறது.
3. மய்யித் ஹாலிராக இருக்கிறது.
4. ஞனங்களுக்கு முன்னாலே முற்படுத்தி வைக்கிறது.
5. சந்தூக்குடன் பூமியன் பேரில் வைக்கிறது.
6. இமாம் பாலிகாக இருக்கிறது.
7. மய்யித்திற்கு ஒரு உறுப்பிற்கு நேராக நிற்கிறது.
8. இமாமும் ஞனங்களும் மய்யித்தும் வெட்கத்தை மறைக்கிறது.

இனி மய்யித் தொழுகையின் ருகுன்களாவது: நான்கு விடுத்தம் தக்பீர் சொல்கிறதும். நிலையில் நிற்கிறதுமாகும்.

**மய்யித் தொழுகையில் சுன்னத் நான்கு:**

1. மய்யித் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் இமாம் மய்யித்துடைய நெஞ்சுக்கு நேராக நிற்கிறது.
2. முந்தின தக்பீருக்கு பின்னாலே தனா ஓதுகிறது.
3. இரண்டாம் தக்பீருக்கு பின்னாலே ஸலவாத் ஓதுகிறது.
4. மூன்றாம் தக்பீருக்கு பின்னாலே துஆ ஓதுகிறது.

**பாப் பீ பயானிஜ் ஜகாத்:**

ஜகாத் உடைய பயானிலே பேசும் பாடம்.

قَالَ اللهُ تَعَالٰي يَا اَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا اَنْفِقُوْا مِمَّا رَزَقْنَاكُمْ مِنْ قَبْلِ اَنْ يَأْتِيَ يَوْمٌ لَابَيْعٌ فِيْهِ وَلَاخُلَّةٌ وَلَاشَفَاعَةٌ

ய.்.னி (அதாவது) ஈமான் கொண்ட ஜனங்களே கொள்வினை கொடுப்பினை தோழமை ஒன்றுக்கொன்று சிபாரிசு இவைகள் செல்லாத நாள் வருகிறதற்கு முன்பாக உங்களுக்கு நான் தந்திருக்கிற முதலில் நின்றும் ஜகாத் கொடுங்கள் என்று அல்லாஹ் தஆலா திருவுளமானான். இன்னும்,

وَالَّذِيْنَ يَكْنِزُوْنَ الذَّهَبَ وَالْفِضَّةَ وَلَايُنْفِقُوْنَهَا فِيْ سَبِيْلِ اللهِ فَبَشِرْهُمْ بِعَذَابٍ اَلِيْمٍ
يَوْمَ يُحْمٰي عَلَيْهَا فِيْ نَارِ جَهَنَّمَ فَتُكْوٰي بِهَا جِباهُهُمْ وَجُنُوْبُهُمْ وَظُهُوْرُهُمْ هٰذَا مَاكَنَزْتُمْ لِاَنْفُسِكُمْ فَذُوْقُوْا مَا كُنْتُمْ تَكْنِزُوْنَ

